தமிழ்நாடு • மகளிர் மேம்பாட்டு •

முற்றம்

₹ 10/- மலர் 16 இதழ் 08 டிசம்பர் 2014 | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ் | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின்
மகளிர் மேளா கிறிஸ்துமஸ் புத்தாண்டு மற்றும் பொங்கல்

விற்பனைக் கண்காட்சி

திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

அன்பு தோழிகளே!

ஒவ்வொரு மாதமும் உங்களை முற்றம் இதழின் வாயிலாக சந்தித்து, என் எண்ணங்களையும், கனவுகளையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி.

இந்தப் புத்தாண்டில் நான் உங்களிடம் ஒரு உறுதி மொழியை வேண்டி நிற்கிறேன்.
படித்து உயர்ந்த பதவியில் இருக்கும் உங்களுக்கு சாமானியமானவர்கள் நாங்கள் என்ன செய்ய முடியும் என்று நினைக்கிறீர்களா?

நீங்கள் தான் இந்த உதவியை செய்ய முடியும்.
நான் கேட்கும் உறுதிமொழியை கொடுக்க முடியும்.
அதன் மூலம் தமிழ்நாட்டை தலைநிமிர்ந்து நிற்கச் செய்ய முடியும்.

இந்தியா முழுவதுமே, அந்த காலத்தில் இருந்து இன்று வரை குழந்தைத் திருமணங்கள் நடந்து கொண்டே இருக்கின்றன. ‘அது சட்டப்படி தப்பு. தண்டிக்கப்படக் கூடிய குற்றம்’ என்று அறிவித்த பிறகும் இவை நடக்கின்றன.

தமிழ்நாட்டில், 25 சதவிகித பெண்களுக்கு பதினெட்டு வயது முடிவதற்கு முன்பே திருமணங்கள் நடைபெறுகின்றன என்று யுனிசெப் நிறுவனம் தெரிவிக்கிறது. இவை சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து அதிக அளவில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. கிருஷ்ணகிரியில் 45% பெண்களுக்கும், சேலம், தர்மபுரி மாவட்டங்களில் 43% பெண்களுக்கும் பதினெட்டு வயதுக்கு முன்னால் திருமணம் நடைபெறுகின்றன.

சில இடங்களில் உறவினர்கள் மூலம் தகவல் தெரிந்து திருமணத்தை நிறுத்தினாலும், மீண்டும் சில மாதங்களில், வேறு இடத்தில் மறைவாக அதே திருமணங்கள் நடைபெற்று விடுகின்றன.

இதற்குக் காரணம் என்ன?

குடும்பத்தில் நிலவும் வறுமையினால், கணவன் மனைவி இருவருமே வேலைக்கு செல்ல வேண்டி இருப்பதால், பருவம் அடைந்த பெண் குழந்தைகளை வீட்டில் வைத்து பாதுகாப்பது சிரமம் என்ற காரணத்தினாலேயே இந்தத் திருமணங்களை நடத்துவதாகப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

ஆனால் உடல் அளவிலும், மனதளவிலும் திருமண வாழ்க்கைக்கும், கர்ப்ப காலத்திற்கும், இப்பெண்கள் தயாராக இருப்பதில்லை. அதனால் சிறுவயது திருமணங்கள், அந்தப் பெண்ணின் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிப்பதுடன், சமூக அமைப்பிற்கும் பாதிப்பு ஏற்படும் என்று எடுத்துச் சொன்னாலும், பெற்றோர்கள் கேட்பதில்லை.

‘பதினெட்டு வயதிற்கும் குறைவான வயதுடைய பெண்களுக்கு திருமணம் செய்து வைக்க மாட்டோம்’ என்று இந்த நாளில் உறுதி ஏற்போம்!

‘நம் வீட்டில் உள்ள குழந்தைகள் மட்டும் இல்லை; அக்கம்பக்கம் வாழும் குழந்தைகளுக்கும் இந்த நிலை ஏற்படாமல் தவிர்ப்போம்’ என்று உறுதி ஏற்க வேண்டும்.

‘எல்லாப் பெண் குழந்தைகளும் கல்வி கற்று, ஒரு வேலையில் அமர்ந்து சுயமாக சம்பாதிக்கும் திறன் பெற்ற பிறகே திருமணம் முடித்து வைப்போம்’ என்று இந்த புதிய ஆண்டில் உறுதிமொழி ஏற்க வேண்டும். இவைகளை நீங்கள் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

குழந்தைத் திருமணத்தை தவிர்க்க நம்மால் ஆன அனைத்து முயற்சிகளையும் செய்வோம்! நன்றி. மீண்டும் அடுத்த மாதம் சந்திக்கலாம்.

என்றும் அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

‘எல்லா பெண் குழந்தைகளும் கல்வி கற்று, ஒரு வேலையில் அமர்ந்து சுயமாக சம்பாதிக்கும் திறன் பெற்ற பிறகே திருமணம் முடித்து வைப்போம்’ என்று இந்த புதிய ஆண்டில் உறுதிமொழி ஏற்க வேண்டும். இவைகளை நீங்கள் செய்வீர்கள் என்று நம்புகிறேன். குழந்தைத் திருமணத்தை தவிர்க்க நம்மால் ஆன அனைத்து முயற்சிகளையும் செய்வோம்!

உள்ளே...

சிறுகதை **வல்லவனுக்கு வல்லவன்**

ஒகேனக்கல் – இந்தியாவின் நயாகரா	4
வேண்டாம் குழந்தைத் திருமணம்	8
பற்கள் பராமரிப்பு	12
டிங்டாங்...டிக்டிக்...தை தை...	16
சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்	22
மின் ஆளுமை சேவை மையம்	30
ஊறுகாய் புல் தயாரித்தல்	32

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும் ஆலோசனைகளும் வரவேற்கப்படுகிறது.

முற்றம் இதழில் வெளியாகும் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள், சுய உதவிக் குழுவினருக்கு அளிக்கப்படும் பல்வேறு பயிற்சிகள் குறித்த விபரங்கள் எங்களைப் போன்ற மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ஊக்கத்தையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தி வருகின்றன. .

கி. சுமதி (ஊக்குனர்),
அன்னை அபிராமி மகளிர் சுய உதவிக் குழு,
நாராயணபுரம், தலங்கை, வேலூர் மாவட்டம்.

சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும் என்ற உயரிய நோக்குடன் செயல்பட்டு வரும் சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டத்தின் செயல்பாடுகளால் வளம் பெற்று வரும் மக்களின் செய்திகளை உடனுக்குடன் வெளியிடுவது முற்றம் இதழ் மட்டுமே.

ரஞ்சனி சேகர்,
அன்னை தெரசா மகளிர் குழு,
முட்டம், கன்னியாகுமரி மாவட்டம்.

ஏழை எளியவர்கள் வாழ்வில் வளம் பெற வேண்டும் என்ற எண்ணத்துடன் நலத்திட்டங்களையும் செயல்படுத்தி வரும் புதுவாழ்வு திட்டம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் போன்றவற்றின் செயல்பாடுகள் முற்றம் இதழில் வெளியிடப்படுவது மிகவும் நன்றாக இருக்கிறது.

சித்ரா செங்குட்டுவன்,
அன்னை இந்திரா மகளிர் குழு,
ஊரப்பாக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்.

வாழ்த்துகள்!

முற்றம் இதழுக்கு 2014–2015ஆம் ஆண்டிற்கு சந்தாதாரர்கள் சேர்ப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை திருநெல்வேலி மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகு 8 மாதங்களில் எட்டியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதை செயல்படுத்திய திருநெல்வேலி மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை முற்றம் இதழ் மனதாரப் பாராட்டுகிறது.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●
முற்றம்
மலர் 16 இதழ் 08 டிசம்பர் 2014
விலை ரூ. 10/-

கௌரவ ஆசிரியர்
வே. அமுதவல்லி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
எஸ். சின்னப்பன்
செயலர், முற்றம்

நிர்வாக ஆசிரியர்
டபிள்யூ. சிராஜுன்னிசா
பொது மேலாளர்

ஆசிரியர் குழு
டி. ஆர். வேதநாயகம்
கூடுதல் இயக்குநர்
எம். மாதவி
கூடுதல் இயக்குநர்

புது வாழ்வு திட்டம்
எல். ராஜா
கூடுதல் திட்ட இயக்குநர்
ஆர். ராஜசேகர்
கூடுதல் திட்ட இயக்குநர்
மோ. கணேஷ்குமார்
தகவல் தொடர்பு வல்லுநர்

பொறுப்பாசிரியர்
ப. கலைமதி
மக்கள் தொடர்பு அலுவலர்

முற்றம் உதவியாளர்
ஏ. கண்ணன்

கணக்கர்
சு. சசிகலா

கணினி வடிவமைப்பு (ஒப்பந்தம்)
மு. செல்வம்

பிழை திருத்துபவர்
எஸ். எஸ். ரவிச்சந்திரன்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி: 044–2817 3412 / 3413
தொலைநகல்: 044–2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது

ஆசிரியரிடமிருந்து...

புத்தாண்டே வருக...!

அன்புள்ள வாசகர்களுக்கு,

புலரும் புத்தாண்டு வாழ்த்துகளுடன் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். கண்களை மூடித் திறப்பதற்குள் ஓர் ஆண்டு காலம் உருண்டோடி விட்டது என்ற உணர்வு ஏற்படுகிறது என்று பரவலாக பலர் கூறுவதைக் கேட்கின்றோம். ஓய்வின்றி சுழற்சி முறையில் பல்வேறு பணிகளை செய்பவர்களுக்கு இந்த உணர்வு ஏற்படுவதில் வியப்பொன்றும் இல்லை. அதே வேளையில், பலிக்காத பகல் கனவுகளைக் கண்டு கொண்டும், அதிர்ஷ்டத்தை நம்பிக் கொண்டும், கற்பனையில் சாதனை படைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு நாட்கள் நகர முடியாமல் இருப்பதைப் போன்றே இருக்கும் என்பதே உண்மை.

ஒவ்வொரு ஆண்டும் தொடங்கும்போது, அனைவரின் மனதிலும் ஒரு உத்வேகம் உண்டாகும். அப்படிப்பட்ட உணர்வு கொண்டவர்களே அந்த ஆண்டில் ஏதாகிலும் சாதனையைப் படைப்பார்கள் என்பது உறுதி. மேடு பள்ளங்களையும், இன்ப துன்பங்களையும், நல்லவைகள் கெட்டவைகளையும் கடந்து செல்வதுதான் இவ்வுலக வாழ்க்கை. இதை எவராலும் தவிர்க்க முடியாத நிலையில், நேர்மறையான நல்லவைகளை மட்டுமே எடுத்துக் கொண்டு நமது வாழ்வை இந்த ஆண்டும் தொடருவோம்.

நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்நாளில் நமது சுய வளர்ச்சிக்கும், சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், நாட்டின் முன்னேற்றத்திற்கும் எவ்வித பங்களிப்பு செலுத்தியிருக்கின்றோம் என்பதை இந்த ஆண்டின் தொடக்கத்திலேயே ஆய்வு செய்து பார்த்துக் கொள்வது அவசியமாகிறது. உண்பதும் உறங்குவதும் மட்டுமே ஒருவரின் வாழ்க்கை என்றால், ஐந்தறிவு படைத்த விலங்குகளுக்கும், மனிதர்களாக பிறந்த நமக்கும் வேறுபாடில்லாமல் போய்விடும். மனிதன் என்றால் சாதனை படைப்பவன் என்பதே அதன் பொருள். கொண்டாட்டங்கள் மற்றும் விருந்துகள் மட்டுமே புத்தாண்டு விழா அல்ல. மாறாக,

1. வரும் ஆண்டுகளில் சட்டங்கள் மட்டுமின்றி, சமூக கட்டுப்பாடுகள் வலுப் படுத்தப்பட்டு, சமூக பொறுப்புகள் உருவாக்கப்பட வேண்டும்.

2. ஆடம்பரத்திற்காகவும், அவசியமற்றவைகளுக்காகவும் அபரிமிதமாக இயற்கையை அழிப்பதை தவிர்த்து, சுற்றுப்புறச் சூழலை பாதுகாக்க வேண்டும்.

3. பெண்களிடம் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வை வலுப்படுத்தி, அவர்கள் ஆண்களுக்கு நிகராக சம உரிமை பெற வழி செய்ய வேண்டும்.

4. இளைஞர்கள் மத்தியில் எழுச்சி மங்கிக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில், அவர்களை விமர்சிப்பதை தவிர்த்து, மாறாக நம்பிக்கை ஏற்படுத்தி அவர்களைத் தட்டி எழுப்ப வேண்டும்.

5. நாட்டுப்பற்று, பிறர் நலம், அகிம்சை, சுய ஒழுக்கம் போன்ற பண்புகளை அனைவரிடமும் ஏற்படுத்த வேண்டும்.

நம்மை மனிதர்களாக அடையாளப்படுத்திக் கொள்ள, மனித சமுதாயம் மகிழ்ச்சியோடு வாழ மேற்கூறிய கருத்துக்களை செயல் வடிவாக்குவதற்கும், நாம் அனைவரும் முயற்சிப்போம் என்ற செய்தியோடு, முற்றம் இனிய புத்தாண்டு மற்றும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துகளையும் உங்கள் அனைவரோடும் பகிர்ந்து கொள்கிறது.

இப்படிக்கு

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தேசிய இளைஞர் தினம் (ஜனவரி 12)

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவின் தலைசிறந்த சமயத் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தவர் சுவாமி விவேகானந்தர். 1863 ஜனவரி 12ஆம் நாள் பிறந்த விவேகானந்தரின் இயற்பெயர் நரேந்திரநாத் தத்தா. இராமகிருஷ்ண பரமஹம்சரின் சீடரான இவரின் கருத்துக்கள் இளைஞர்களை எழுச்சியடைய செய்வதாக அமைந்துள்ளன. இவர் இந்தியாவிலும், மேலை நாடுகளிலும் பல்வேறு சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

1893ஆம் ஆண்டு அமெரிக்காவின் சிகாகோ நகரில் நடைபெற்ற உலகச் சமயங்களின் பாராளுமன்றத்தில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய சொற்பொழிவுகள் உலகப் புகழ் பெற்றது. 1902 ஜூலை 4ஆம் தேதி விவேகானந்தர் இன்னுடல் நீத்தார். சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினம் ஆண்டுதோறும் தேசிய இளைஞர் தினமாக நாடு முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது. ■

தேசிய பெண் குழந்தைகள் தினம் (ஜனவரி 24)

இந்தியாவில் பெண் குழந்தைகளின் நலனைக் காக்க விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஜனவரி 24ஆம் தேதி தேசிய பெண் குழந்தைகள் தினம் கடந்த 2009ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்படுகிறது. இந்த தினம் 1966ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் பெண் பிரதமராக திருமதி இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் பதவி ஏற்ற நாள். இந்தியாவைப் பொறுத்த வரையில் பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுக்க அதிக தொகை செலவாகிறது. இந்த செலவு பெற்றோரைச் சேர்ந்தது என்பதால் பெண் பிள்ளைகளை சுமையாக நினைத்து கருவிலேயே அழிக்கும் சூழல் காணப்படுகிறது.

ஒவ்வொரு பெண் குழந்தையும் நம் நாட்டின் செல்வங்கள் என்பதால் ‘பெண் குழந்தையை பிறக்க விடுங்கள்’ என பெற்றோருக்கு இத்தினத்தில் எடுத்துச் சொல்லப்படுகிறது. மேலும் பெண் குழந்தைகளுக்கும் பல விஷயங்கள் அறிவுறுத்தப்படுகின்றன. ‘கல்வி குறித்த அவர்களின் உரிமைப் பெற முன் வர வேண்டும். 18 வயதுக்கு முன் திருமணம் செய்து கொள்வதை தவிர்க்க வேண்டும். வரதட்சணைக் கொடுக்க மாட்டேன் என்ற உறுதிமொழியை எடுக்க வேண்டும்’ என்று வற்புறுத்தப்படுகிறது. குடும்ப வன்முறைக்கு எதிராக பெண்களுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பு உள்ளது என்பதை அவர்கள் அறிந்து வைத்துக் கொள்வது அவசியம். ■

நாட்டைக் காக்க
பல்வேறு போர்களில் தங்களின் இன்னுயிரை ஈந்த படை வீரர்களுக்காக நாட்டின் தலைநகரான டில்லியில் உள்ள இந்தியா கேட் அமர்ஜோதிக்கு வீரவணக்கம் செலுத்தப்படுகிறது.

இந்தியக் குடியரசு தினம் (ஜனவரி 26)

இந்தியக் குடியரசு நாள், இந்திய அரசு சட்டம் 1935இன் மாற்றாக இந்திய அரசியலமைப்புச் சட்டம் செயலாக்கத் திற்கு வந்த நாளாகும். 1930ஆம் ஆண்டு இந்திய விடுதலை இயக்கத்தினர் "பூர்ண சுவராஜ்' என்ற விடுதலை அறைகூவலை நினைவு கூர ஜனவரி மாதம் 26ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது.

நாட்டைக் காக்க பல்வேறு போர்களில் தங்களின் இன்னுயிரை ஈந்த இந்தியப் படை வீரர்களுக்காக நாட்டின் தலைநகர் தில்லியில் அமைந்துள்ள இந்தியா கேட்டில் உள்ள அமர் ஜோதிக்கு வீரவணக்கம் செலுத்துவதுடன் தொடங்கும் குடியரசு தின விழாவில், மேதகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் மூவர்ணக் கொடியை ஏற்றி முப்படை வீரர்களின் அணிவகுப்பைப் பார்வையிடுவார்.

தற்போது திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் இந்திய ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார்கள். நாட்டுக்கு மிகப்பெரும் சேவை புரிந்த படை வீரர்களுக்கான பதக்கங்களும், விருதுகளும் மேதகு ஜனாதிபதி அவர்களால் வழங்கப்படும். ■

தண்ணீர் விழும்போது ஏற்படும் புகை பாறைகளில் இருந்து தோன்றுவது போல் இருப்பதால் இதற்கு ஒகேனக்கல் என்று பெயர்,

ஒகேனக்கல்
இந்தியாவின் நயாகரா

தமிழகத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களில் சிறந்த ஒன்றாகக் கருதப்படுவது தருமபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒகேனக்கல் அருவியாகும். ஆர்ப்பரிக்கும் அருவிகள் பலவும் சங்கமிக்கும் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிக்கு ஒருமுறை சென்று வந்தவர்கள் மீண்டும் மீண்டும் அங்கு செல்ல விரும்பும் அளவிற்கு உடலுக்கும் மனதிற்கும் உற்சாகம் தரும் இடமாகும்.

தமிழக – கர்நாடக எல்லைப் பகுதியில் காவிரி ஆற்றின் பாதையில் அமைந்துள்ள ஒகேனக்கல் 'இந்தியாவின் நயாகரா என்று அழைக்கப்படுகிறது. ஒகேனக்கல் என்றால் கன்னட மொழியில் 'புகை சூழ்ந்த பாறைகள்' என்று பொருள். தண்ணீர் விழும்போது ஏற்படும் புகை பாறைகளில் இருந்து தோன்றுவது போல் இருப்பதால் இதற்கு ஒகேனக்கல் என்று பெயர் ஏற்பட்டது. கர்நாடகாவின் பிரம்மகிரி மற்றும் குடகு மலையில் உற்பத்தியாகி, அடர்ந்த வனப்பகுதியில் பல நூறு கிலோ மீட்டர்கள் உருண்டோடி ஒகேனக்கல்லை அடையும் காவிரி ஆறு, இங்கு பல்வேறு அருவிகளாகப் பிரிந்து ஆர்ப்பரித்துக் கொட்டுகிறது.

குறிப்பாக பெரியபாணி என்ற இடத்தில் சுமார் 170 அடி உயரத்தில் இருந்து ஆர்ப்பரித்து விழும் தண்ணீர், சுற்றுலாப் பயணிகளை உற்சாகமடைய வைக்கிறது. அருவியை ஒட்டி மழைத்துளிகளைப் போல் பெய்யும் சாரலில் நனைவதற்கும் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். ஒகேனக்கல்லில் தண்ணீர் ஏரி போல்பலமைல்களுக்குசூழ்ந்திருப்பதால்பரிசல்போக்குவரத்தும் உண்டு. இதில் சென்று அருவியின் அழகை ரசிக்கலாம்.

உற்பத்தியாகும் இடத்தில் இருந்து மலைப்பகுதிகள் மற்றும் வனங்களின் வழியாக தண்ணீர் ஆர்ப்பரித்து வருவதால், மூலிகைகளின் குணநலன்கள் அதில் கலந்துள்ளதாகவும், இதன் காரணமாக அருவியில் குளிப்பது புத்துணர்வை ஏற்படுத்துவதாகவும், சுற்றுலாப் பயணிகள் தெரிவிக்கின்றனர்.

ஒகேனக்கல் பகுதியில் உள்ள ஐந்தருவி, சினி அருவி, பெரியபாணி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள பாறை அமைப்புகளும், பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கின்றன. உலகின் மிகப் பழமையான பாறை களாகக் கருதப்படும் கார்பனேட் பாறைகள் இவை என்பதால், அவற்றைக் காண்பதிலும் சுற்றுலாப் பயணிகள் ஆர்வம் காட்டுகின்றனர். வனத்துறையால் பராமரிக்கப்பட்டு வரும் சிறிய மிருகக் காட்சி சாலை மற்றும் முதலைப் பண்ணையும் இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவர்வதாக அமைந்துள்ளன.

அருவிகளில் குளிப்பது மனதிற்கு உற்சாகமளிக்கும். ஆனால் உடலை உற்சாகப்படுத்தும் விஷயமும் ஒகேனக் கல்லில் பிரபலமாக இருக்கிறது. அதுதான், ஆயில் மசாஜ் எனப்படும் எண்ணெய் குளியல். ஒகேனக்கல்லுக்கு சுற்றுலா வரும் பயணிகளில் பலர் அருவியில் குளிப்பதற்கு முன்பாக, ஆயில் மசாஜ் செய்து கொள்கின்றனர். தலை முதல் கால் வரை மூலிகை எண்ணெய் பூசி செய்யப்படும் இந்த மசாஜ் இந்தப் பகுதி யில் மிகவும் பிரபலம்.

அருவி குளியலை முடித்த பின்னர், சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படும் பசியைப் போக்குவதற்கென்றே அருவி யின் அருகிலேயே உணவகங்கள் பல உள்ளன. அருவியில் இருந்து பிடித்து வரப்படும் பல்வேறு வகையான மீன்கள் இங்கு சமைக்கப்பட்டு சுடச் சுட விற்பனை செய்யப்படுகின்றன.

மாவட்ட தலைநகரான தர்மபுரியில் இருந்து 46 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது இந்த சுற்றுலாத் தலம். இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் ஓட்டல் தமிழ்நாடு உள்ளது. இதுமட்டுமின்றி நூற்றுக்கணக்கான தனியார் விடுதிகளும் உள்ளன. தர்மபுரியில் இருந்து ஒகேனக்கல்லுக்கு அரசு பேருந்துகள் இயக்கப்படுவதுடன், தனியார் வாகன வசதியும் கிடைக்கிறது. ■

கன்றின் தாய்மை! 20 மாதத்தில்...

அன்புள்ள முற்றம் வாசகர்களே!

சென்ற இதழில் குறிப்பிட்டுள்ளவாறு கன்றுகளை பராமரிப்பதுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு அவைகளை நோய்களிலிருந்து காப்பாற்றினால் பிறந்த 18லிருந்து 20 மாதத்திற்குள் இக்கன்றுகள் பூப்பெய்தி தாய்மையை அடையும் என்பது உறுதி.

கன்று வெள்ளை கழிச்சல் நோய்

பாதிக்கப்பட்ட கன்றுகளுக்கு முதலில் காய்ச்சல், சோர்வு, அமைதியின்மை, உணவு உட்கொள்ளாமை முதலிய அறிகுறிகள் இருக்கும். 48 – 96 மணி நேரத்தி ற்குள் தொடர்ந்து மஞ்சள் கலந்த வெள்ளை வயிற்றுப் போக்கு, பொறுக்க முடியாத துர்நாற்றத்துடன் தொடங்கும். இந்நோய் ஏற்பட்டால் 10 முதல் 15 சதவீதம் வரை கன்றுகள் இறக்க நேரிடும்.

நிமோனியா நோய்

பாதிக்கப்பட்ட கன்றுகளுக்கு காய்ச்சல், மூச்சிரைப்பு, இருமல், பலஹீனம், பசியின்மை, கண் இமையின் உட்புறத்தில் சிவந்திருப்பது, மூக்கிலிருந்து மெல்லிய பசை போன்ற நீர் கசிதல் பேன்றவை ஏற்படும். கொடிய இந்நோயின் அறிகுறிகள் தெரிந்த உடன் சிகிச்சை அளிக்கவில்லையெனில் கன்றுகள் இறக்க நேரிடும்.

காப்டிப்திரியா நோய்

பொதுவாக 2 வாரத்திலிருந்து 3 மாதம் வரை வயதுள்ள கன்றுகளுக்கு இந்நோய் ஏற்படும். 104 டிகிரி வரை காய்ச்சல், சோர்வு, பசியின்மை, உதடுகளின் ஓரங்களிலும், ஈறுகளிலும் வாயினுள்ளும் கருமை கலந்த மஞ்சள் பட்டைகளாக புண்கள் தோன்றும். வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் மஞ்சள் நிறமாக நீர் வடியும்.

மேற்குறிப்பிட்ட நோய்களின் அறிகுறிகள் தெரிந்தவுடன் தாமதமின்றி கலந்டை மருத்துவரை அணுகி கால்நடைகளுக்கு உரிய சிகிச்சை அளித்தால் கன்றுகளைக் காப்பாற்றலாம்.

மேலும் கன்றுகள் பிறந்த 4 மாதம் முதல் 12 மாதம் முடிவதற்குள் அடைப்பான், தொண்டை அடைப்பான், கோமாரி நோய் போன்றவைகளுக்கு உரிய தடுப்பூசிகளைப் போட வேண்டும். கன்றுகளின் உடல் மேலுள்ள உண்ணிகளை நீக்க தொடர் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும்.

12 மாதம் முடிந்தபின் கன்றுகளை பராமரிப்பது எப்படி....அடுத்த இதழில் பார்ப்போம். ■

டாக்டர் பி. துரைராசன்,
கால்நடை மருத்துவர்,
தமிழ்நாடு மாநில ஊரக
வாழ்வாதார இயக்கம்
சென்னை.

பெரியபாணி என்ற இடத்தில் சுமார் 170 அடி உயரத்தில் இருந்து ஆர்ப்பரித்து விழும் தண்ணீர் சுற்றுலாப் பயணிகளை உற்சாகமடைய வைக்கிறது. அருவியை ஒட்டி மழைத்துளிகளைப் போல் பெய்யும் சாரலில் நனைவதற்கும் சுற்றுலாப் பயணிகள் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர்.

புதுப் பானையில், புத்தரிசியிட்டு, பொங்கலிடுகையில் பால் பொங்கி வழிந்து பொங்கி வருவதால், பிறந்துள்ள புத்தாண்டு முழுவதும் நம் வாழ்வும், வளமும் அந்தப் பால் போன்று பொங்கிச் சிறக்கும். மகிழ்ச்சியும், திளைப்பும் ஒரு சேரப் பல்கிப் பெருகுவதோடு, கழனியெல்லாம் பெருகி, அறுவடை மென் மேலும் அதிகரிக்கும் என்பதே இப்பண்டிகையின் தத்துவமும், தொன்றுதொட்டு வரும் நம்பிக்கையுமாகும்.

அறுவடைத் தொடங்கியதைக் குறிக்கும் வகையில், பயிர் விளைச்சலுக்கு உதவிய மழை, சூரியன், கால்நடைகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவித்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்யும் நாளே தைப்பொங்கல் திருநாள் எனலாம்.

போகிப் பண்டிகை

பயிர்கள் செழிக்கவும், உயிர்கள் வாழவும் மழை அவசியம். 'பழையனகழிதலும், புதியனபுகுதலும்' என்ற வகையில் போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. பொங்கலுக்கு முன்னரே வீட்டை வெள்ளையடித்துச் சுத்தம் செய்து, தேவையற்றவை என ஒதுக்கி வைக்கப்படும் பழைய பொருட்களை போகியன்று தீயிட்டுக் கொளுத்துவது வழக்கம்.

இப்போதெல்லாம் 'டயர்'களைக் கொளுத்தி போகிப் பண்டிகை கொண்டாடும் மூடத்தனம் பரவலாக நடக்கின்றது. இதனால் வளி மண்டலம் மாசுபடுவதோடு, மனிதர்களுக்கு நோயும் உண்டாகின்றன. சுவாசக் கோளாறு உள்ளவர்கள், டயர்கள் வெளியிடும் நச்சுப்புகையால் மேலும் பாதிப்பிற்கு ஆளாவார்கள். எனவே நாம் சமுதாய அக்கறையோடும் கட்டுப்பாட்டோடும், இருந்து, டயர்களை கொளுத்தி போகி கொண்டாடும் வழக்கத்தினை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும்.

பொங்கல் பண்டிகை

ஆடிப் பட்டத்தில் தேடி விதைத்து, விளைந்த பயிரை தை மாதம் பிறப்பதற்கு முன் அறுவடை செய்து, அந்த புத்தரிசியை மண் பானையில் வைத்து, சர்க்கரைப் பொங்கல் செய்வது மரபு. வாசலிலே வண்ணக் கோலமிட்டு, அதன் நடுவே பொங்கல் பானையை வைத்து, பானையின் கழுத்தில் மஞ்சள் கிழங்கை இலையோடு கட்டி, மணம் பரப்பும் பொங்கல் சோறு பொங்கி எழும் போது, 'பொங்கலோ பொங்கல்' என்று கூறி மகிழ்வர் விவசாயப் பெருமக்கள்.

பொங்கல் பண்டிகை தரும் மகிழ்ச்சி, நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் பொதுவானதாக இன்றும் இருக்கிறது.

மாட்டுப் பொங்கல்

நமது நாட்டில் செல்வத்தின் அடையாளமாக கால்நடைகள் திகழ்கின்றன. ஏரின் பின்னால்தான் உலகமே சுழல்கின்றது என்பதை திருவள்ளுவர் பெருமகனார் குறளின் வாயிலாக

புகழ்கிறார். நிலத்தை உழும் ஏரினை முன்னேந்திச் செல்பவை மாடுகளே. இதன் மூலம் மாடுகளே உலகை உயிர்ப்போடு வைத்துள்ளன எனக் கூறுவது மிகையில்லை. அந்த சிறப்பு மிகுந்த மாடு களைக் கடவுளாகவே கருதி வழிபடுவதுதான் மாட்டுப் பொங்கலின் தத்துவம்.

மாட்டுப் பொங்கலன்று பசுக்களையும், கன்றுகளையும் குளிப்பாட்டி, அவைகளுக்கு மஞ்சள் பூசி, திருநீறிட்டு, குங்குமம் வைத்து, மாலை போட்டு வணங்குவதுடன், சுவையான உணவுகளையும் படைப்பர். காளை மாடு களுக்கு கொம்புகளில் வர்ணம் பூசி, காலில் சலங்கை கட்டி, 'வீரநடை' நடக்க வைப்பர். பல வீடுகளில் காளை மாடுகளுக்கு வண்ண துணிகளை போர்த்தி மரியாதை செய்வதும் மாட்டுப் பொங்கலின் வழக்கம்.

திருவள்ளுவர் தினம்

அனைவராலும் போற்றப்படும் தெய்வப் புலவரான திருவள்ளுவர் பெருந்தகையை சிறப்பிக்கும் வகையில் பொங்கலுக்கு மறுதினம் திருவள்ளுவர் தினம் கொண்டாடப்படுகிறது. உலகில் பல்வேறு தொழில்கள் மேற்கொள்ளப்பட்டாலும், ஏர்த் தொழிலின் பின்னால்தான் உலகமே நிற்கின்றது, அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது என்பதை "சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" (குறள் 1031) என்ற குறள் நமக்கு உணர்த்துகிறது. நீதி, நேர்மை, உண்மை, துறவு, அரச நீதி, அன்பு என்று அனைத்து தன்மைகள் குறித்த செய்திகளையும் தன்னகத்தே கொண்ட சிறப்பு மிகுந்தது திருக்குறளாகும். திருவள்ளுவர் தினத்தன்று வள்ளுவர் கூறிய அறநெறிப் பாடல்களை நாமும் ஓதி, இளைய சமுதாயத்தினருக்கும் அவற்றின் பொருளை உணர்வித்து 'வள்ளுவ பூஜை'யினை மேற்கொள்ளும் நன்னெறியை தமிழர்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும்.

காணும் பொங்கல்

'கனு பொங்கல்' என்பது பெண்கள் தங்களின் சகோதரர்களின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு விரதமாகும். அன்று காலை நீராடி, விரதமிருந்து, வெட்ட வெளியில் சூரியக் கோலமிட்டு, அதில் பொங்கல், கரும்பு போன்றவற்றை வைத்து ஆதவனுக்கு படைப்பார்கள். அத்தினத்தில் புத்தாடை அணிந்து, சுற்றத்தாரையும், நண்பர்களையும், பார்த்து பேசி மகிழ்வது, இன்பச் சுற்றுலா செல்வது போன்ற செயல்களில் பெரும்பாலோர் ஈடுபடுவர். பல ஆண்டுகளுக்கு முன்னர் எல்லாச் சந்தர்ப்பங்களிலுமே சொந்தமும், நட்பும் அடிக்கடி சந்தித்து மகிழும் பண்பாடு இருந்தது. இன்றைய காலகட்டத்தில், வீட்டுக்கு வரும் உறவுகளையும், நட்புகளையும் பார்த்து புன்னகை புரிவது கூட அரிதான செயலாகி விட்டது. இந்த அவல நிலையை மாற்ற இந்தக் காணும் பொங்கல் நாளில் நாம் உறுதியேற்போம்.

நமது நாட்டில் செல்வத்தின் அடையாளமாக கால்நடைகள் திகழ்கின்றன. ஏரின் பின்னால்தான் உலகமே சுழல்கின்றது என்பதை திருவள்ளுவர் பெருமகனார் குறளின் வாயிலாக புகழ்கிறார். நிலத்தை உழும் ஏரினை முன்னேந்திச் செல்பவை மாடுகளே. இதன் மூலம் மாடுகளே உலகை உயிர்ப்போடு வைத்துள்ளன எனக் கூறுவது மிகையில்லை. அந்த சிறப்பு மிகுந்த மாடுகளைக் கடவுளாகவே கருதி வழிபடுவதுதான் மாட்டுப் பொங்கலின் தத்துவம்.

கலைகளைப் பரப்புதல்

கிராமிய இசைக்கருவிகளான தவில், நாதசுரம், பறை, உருமி, கொட்டு போன்ற வாத்தியங்களை இசைத்தல், சிலம்பாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தப்பாட்டம், கரகாட்டம் போன்ற நடனங்களை ஆடுதல், சிலேடையுடன் கூடிய பேச்சுக்கலை, நகைச்சுவை நிகழ்ச்சி என ஒவ்வொரு குடும்பத்திற்கும், அவர்கள் சார்ந்துள்ள சமூகத்திற்கும் உரிய பாரம்பரிய கலைகளை வளர்ப்பதற்காகவும் பொங்கல் பண்டிகையை காலங்காலமாக நம் முன்னோர்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். இதனால் பிரத்யேக கலைகள் ஒரு தலைமுறையுடன் முடிந்து விடாமல் அடுத்தடுத்த சந்ததியினருக்கும் சென்று சேர்ந்துள்ளது.

வீட்டில் உள்ள வயதான முதியவர்களான தாத்தா, பாட்டி தொடங்கி கைக்குழந்தைகள் வரை ஒரே ஊரில், ஒரே இடத்தில் கூடி பரஸ்பரம் அன்பையும், பாசத்தையும் பரிமாறிக் கொண்டு, பொங்கல் திருநாளைக் கொண்டாடி மகிழ்ந்த நிலையில் இன்று மாறி வருகிறது. கூட்டுக் குடும்பங்களின் எண்ணிக்கை குறைந்து, தனிக் குடும்பங்கள் (கணவன், மனைவி, ஒன்று அல்லது இரண்டு குழந்தைகள்) பெருகி விட்ட தற்போதைய நிலையில், இன்றைய சந்ததியினருக்கு பொங்கல் பண்டிகையை ஏதாவது தென் மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தால் மட்டுமே பொங்கல் பண்டிகையின் சிறப்புகளும், உறவின் அருமையும் தெரிய வரும். ■

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு குழந்தைத் திருமணம் முக்கிய காரணம்.

வேண்டாம் குழந்தைத் திருமணம்...

நாட்டில் நிலவும் சமுதாயப் பிரச்சனைகளில் குழந்தைத் திருமணமும் ஒன்று. இதனால் கல்வி அறிவிலும், பொருளாதாரம் மற்றும் மனித வள மேம்பாட்டிலும் பின்தங்கிய நிலையில் நம் நாடு உள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு குழந்தைத் திருமணம் முக்கிய காரணம். அனைத்திற்கும் மேலாக நம் நாட்டின் மக்கள் தொகை பெருக்கத்திற்கும் தாய் சேய் மரணத்திற்கும் முக்கிய காரணமாக இளமைத் திருமணம் உள்ளது. 20–24 வயதில் திருமணம் புரிவோருக்கு ஒப்பிடுகையில் மகப்பேறு மரணம் 15–19 வயதில் இருமடங்கும், 15 வயதிற்குள் 5 மடங்கும் ஏற்பட வாய்ப்புள்ளது.

குழந்தைத் திருமணம்

18 வயது நிறைவடையாத பெண்ணிற்கோ, 21 வயது நிறைவடையாத ஆணிற்கோ செய்யப்படும் திருமணம் 'குழந்தைத் திருமணம்' ஆகும்.

குழந்தை திருமணத்திற்கான காரணங்கள்

வறுமை; போதிய கல்வி அறிவு இல்லாமை; பெண் குழந்தைகளை குடும்பச் சுமையாக கருதுவது; இடம் பெயர்ந்து வாழும் குடும்ப சூழ்நிலை; சமூகத்தில் பெண்ணிற்கு உயர்வு அளிக்காத அடிமைத்தனம்; வரதட்சணைக் கொடுமை; குறைந்து வரும் பாலின சதவிகிதம்; திருமணத்தின் மூலம் பாலியல் தொல்லைகளிலிருந்து பெண்ணிற்கு பாதுகாப்பு என்ற நம்பிக்கை; குழந்தைத் திருமணத்தின் பின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு இன்மை மற்றும் நவீன காலத்தில் சிறுமிகள், இளைஞர்களிடையே ஏற்படும் இனக்கவர்ச்சி பற்றிய புரிதல் இன்மை போன்றவை குழந்தை திருமணத்திற்கான காரணங்கள் ஆகும்

குழந்தைத் திருமணத்தின் பின் விளைவுகள்

பெண்ணிற்கு கல்வி தடைபடும், தன்னம்பிக்கை குறையும்; அடிக்கடி கருவுறுதல், கருக் கலைப்பினால் சத்து பற்றாக்குறை ஏற்படும்; இளம் வயதில் கர்ப்பப்பை முழு வளர்ச்சி அடையாததால் கருச்சிதைவு ஏற்படும்; பிரசவத்தின் போது தாய், சேய் மரணம் ஏற்படும்; எடை குறைவான (அல்லது) குறைபாடுகளுடன் குழந்தை பிறக்கும்; தாய்க்கு இரத்த சோகை ஏற்படும். உடல் மற்றும் மனம் பலவீனம் அடையும்; நோய் மற்றும் வறுமைக்கு வழி வகுக்கும்; குடும்பத்தில் குடிப்பழக்கம் மற்றும் பெண்கள் வன்கொடுமைக்கு ஆளாகும் நிலை ஏற்படும்.

மேலும் பெண் கல்வி அறிவு தடைபடுவதால் குழந்தைகளை சரியாக வழிநடத்த இயலாமல் கல்வியில் பின்தங்கும் நிலை ஏற்படும்; குடும்பத்தை சரியாக வழி நடத்த இயலாமல் குழந்தைகளை வேலைக்கு அனுப்ப நேரிடும்; கல்வியறிவு, சுய சிந்தனை, பாலியல் முதிர்ச்சி இல்லாத காரணங்களால் குடும்பத்தில் பிரச்சனைகள்

குழந்தைத் திருமணத்தின் பின் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு இன்மை மற்றும் நவீன காலத்தில் சிறுமிகள், இளைஞர்களிடையே ஏற்படும் இனக்கவர்ச்சி பற்றிய புரிதல் இன்மை போன்றவை குழந்தை திருமணத்திற்கான காரணங்கள் ஆகும்.

ஏற்பட்டு குடும்பம் பிரிந்து போகும்; குடும்பப் பிரச்சனையில் தற்கொலை, கொலை நிகழ்வதால் பெண்கள் இளம் வயதில் விதவையாகவும், கணவனால் கைவிடப்பட்டவர்களாகவும், குழந்தைகள் ஆதரவற்ற அனாதைகளாகவும் ஆவார்கள்.

இந்தியாவில் பெண்களுக்கு பல சமூக பிரச்சனைகள் இருப்பதால் பெண் குழந்தை மீதான விருப்பமின்மை காரணமாக பெண் சிசுக்கள் கொல்லப்படுவதாலும் (அ) பெண் குழந்தைகளின் பிறப்பு தடுக்கப்படுவதாலும், ஆண் பெண் எண்ணிக்கை வேறுபாடு அதிகமாக இருக்கிறது. ஆகவே திருமண வயதுடைய ஆண்களுக்கு மணப் பெண்கள் கிடைக்காத சூழ்நிலை தற்போது பரவலாக உள்ளது.

இந்தியத் திருமணச் சட்டங்கள்

1. 1891ஆம் ஆண்டு பெண்ணுக்கு குறைந்தபட்ச திருமண வயது 12 என அப்போதைய ஆங்கிலேய அரசு சட்டம் கொண்டு வந்தது. மரபுகளுக்கு எதிரானதெனக் கூறி மக்கள் இதை எதிர்த்தனர்.
2. 1929ல் பெண்ணுக்கு 15, ஆணுக்கு 18 என குறைந்தபட்ச திருமண வயதை நிர்ணயித்து ஆங்கிலேய அரசு கொண்டு வந்த சாரதா சட்டம் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை.
3. 1948ல் இந்த திருமண பதிவு மற்றும் மணவிலக்கு சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்படி திருமண வயது ஆணுக்கு 21 எனவும், பெண்ணுக்கு 18 எனவும் நிர்ணயிக்கப்பட்டது. மேலும் திருமணத்தை பதிவு செய்வது சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டது. பலதார மணம் சட்டத்திற்கு புறம்பானது என அறிவிக்கப்பட்டது.
4. 1978ஆம் ஆண்டில் குழந்தைத் திருமண தடுப்புச் சட்டத்தில் திருத்தம் செய்து பெண்ணிற்கு 15லிருந்து 18 ஆகவும், ஆணின் திருமண வயது 18லிருந்து 21 ஆகவும் உயர்த்தப்பட்டது. ■

(தொடரும்)

கரூர்

தனிநபர் தொழில் கடன் உதவி

கரூர் மாவட்டம், ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சியில் மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோருக்கு வட்டியில்லா தனிநபர் தொழில் கடன் வழங்கும் நிகழ்ச்சி 09.12.2014 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 11 பயனாளிகளுக்கு கீற்று முடைதல், ஆடு வளர்ப்பு, நகல் எடுக்கும் இயந்திரம், தையல் இயந்திரம் போன்ற தொழில் நடவடிக்கைகள் மேற்கொள்ள கடனுதவியினை கரூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் திரு. செ. ம. முகம்மது சகாப்புத்தீன், ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி. வள்ளியம்மாள் ஆகியோர் வழங்கினர். இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்றத் துணைத்தலைவர் திரு. சிவசாமி, உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டார திட்ட மேலாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

திருச்சி

மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி

சர்வதேச மாற்றுத் திறனாளிகளின் தினத்தை முன்னிட்டு திருச்சி மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறை சார்பில் 19.11.2014 அன்று திருச்சியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டியில் திருச்சி மாவட்ட மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் (TNSRLM) சார்பில் 34 மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டனர்.

பல்வேறு போட்டிகளில் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் கலந்து கொண்ட மாற்றுத் திறனாளிகள் 10 பரிசுகளை வென்றுள்ளனர். இப்போட்டியில் முதல் பரிசுகளைப் பெற்ற மூன்று மாற்றுத் திறனாளிகள் 01.12.2014 அன்று நடைபெற்ற மாநில அளவிலான மாற்றுத் திறனாளிகள் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர். இதில் 50 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் மோகன் (17 வயது), 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் புவனேஷ்வரி (17 வயது) ஆகியோர் முதல் பரிசு பெற்றுள்ளனர்.

பரிசு பெற்றவர்களை மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை அமைச்சர் திருமதி. பி. வளர்மதி அவர்களும் மற்றும் திருச்சி மாவட்ட ஆட்சியர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., அவர்களும் பாராட்டி பரிசுகளை வழங்கினர். ■

அழகுக் குறிப்புகள்

உடலுக்கு அழகும் வலிவும் தரும் இயற்கை பொருட்கள் பலவுண்டு. அவற்றுள் பழங்களும் முதலிடம் பெறுகின்றன. அத்தகைய பழங்கள் சிலவற்றை நாம் பார்க்கலாம்.

திராட்சை

எண்ணெய்த்தன்மை கொண்ட அடிக்கடி பருக்கள் வரும் முகத்திற்கு திராட்சை சாறு ஏற்றது. தினமும் திராட்சை சாற்றை முகத்தில் பூசி, 20 நிமிடங்கள் கழித்து கழுவ வேண்டும். இப்படி அடிக்கடி செய்து வந்தால் முகத்தில் பருக்கள் வருவது குறையும்.

மாதுளை

முகச் சுருக்கத்தையும், கருப்புப் படையையும் போக்கும் தன்மை கொண்டது மாதுளை. இந்தப் பழத்தின் முத்துக்களை அரைத்து முகத்தில் பூசி, சிறிது நேரம் கழித்து தண்ணீரில் கழுவினால் முகம் புத்துணர்ச்சி பெறும். செயலிழந்த செல்களை நீக்கி, புதிய செல்களை உருவாக்கும் திறன் மாதுளம் பழத்திற்கு உண்டு.

பப்பாளி

பப்பாளிப் பழக்கூழை தினமும் முகத்தில் பூசிக் கொள்ளலாம். சருமத்திற்கு நிறமும், மினுமினுப்பும் கிடைக்கும். பப்பாளி கூழ், ஓட்ஸ், தேன் போன்றவைகளை கலந்து முகத்தில் பூசப் பயன்படுத்தலாம். ■

சிறுகதை

வல்லவனுக்கு வல்லவன்

‘வலிமை வாய்ந்த சிங்கத்தையே வென்றேன். அற்பச் சிலந்தியிடம் சிக்கி உயிரை விட வேண்டியுள்ளதே, வல்லவனுக்கு வல்லவன் இருக்கிறானே’

ஒரு காட்டில் சிங்கம் ஒன்று இருந்தது. இரு நாள் அது தனது குகையில் படுத்திருந்தது. அப்போது கொசு ஒன்று அதன் முகத்தைச் சுற்றிச் சுற்றிப் பறந்து வந்தது.

இதைக் கண்டு எரிச்சல் அடைந்த சிங்கம், ‘அற்பக் கொசுவே என்ன துணிச்சல் இருந்தால் இப்படிச் செய்வாய்? இங்கிருந்து உடனே ஓடிவிடு. இல்லையென்றால் உன்னை ஒழித்து விடுவேன்’ என்றது.

அதற்குக் கொசு ‘ஏய் சிங்கமே! உன்னைவிட வலிமையுள்ளவன் நான். உன்னால் என்னை என்ன செய்ய முடியும்?’ என்று தற் பெருமையுடன் சொன்னதுடன், சிங்கத்தினுடைய முகத்தில் அமர்ந்து அதைக் கடிக்கவும் தொடங்கியது.

இதைக் கண்டு கோபம் கொண்ட சிங்கம், ‘அற்பக் கொசுவே உன்னை என்ன செய்கிறேன் பார்’ என்றபடி தன் கால்களால் தனது முகத்தில் அறைந்தது.

இதை எதிர்பார்த்த கொசு அங்கிருந்து பறந்து, சிங்கத்தின் மூக்கில் கடித்தது.

சிங்கமோ கொசுவை அடிக்கத் தன்னாலான முயற்சிகளை எல்லாம் செய்தது. கொசுவோ பாய்ந்து பாய்ந்து அதன் முகத்திலும் கன்னத்திலும் உடலிலும் மாறி மாறிக் கடித்தது.

கொசுவை அடிக்க சிங்கம் தன் முகத்திலும் உடலிலும் கால்களால் அறைந்ததாலும், நகங்களால் கீறியதாலும் அதன் உடலெங்கும் காயங்கள் ஏற்பட்டது. கொசுவோ சிங்கத்திடம் சிக்கவே இல்லை.

களைப்பும் வேதனையும் அடைந்த சிங்கம் தன் தோல்வியை ஒப்புக் கொண்டது.

‘சிங்கத்தையே வென்று விட்டோம்’ என்று மகிழ்ச்சியடைந்த கொசு, அங்கிருந்து பறந்து சென்றது. குகையின் ஒரு மூலையில் இருந்த சிலந்தி வலையை அது கவனிக்கவில்லை. அந்த வலையில் சிக்கிக் கொண்டது. அதிலிருந்துவிடுபடத் தன்னாலான முயற்சி செய்தது. ஆனால் அதனால் சிலந்தி வலையில் இருந்து விடுபட முடியவில்லை.

அருகில் வந்த சிலந்தி அதைக் கொல்லத் தொடங்கியது. ‘வலிமை வாய்ந்த சிங்கத்தையே வென்றேன். அற்பச் சிலந்தியிடம் சிக்கி உயிரை விட வேண்டியுள்ளதே, வல்லவனுக்கு வல்லவன் இருக்கிறானே’ என்று வருத்தத்துடன் சொல்லியபடி உயிரை விட்டது கொசு. ■

செல்வி. பேச்சியம்மாள்,
தாம்பரம், சென்னை.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வளமாக்கும் வங்கி சேவைகள் "சிறப்பு பார்வை"

உழவர் மன்றம்

கே. எம். திருநாவுக்கரசு,
முதுநிலை ஆலோசகர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கான பொதுவான மன்றமாக அமைக்கப்படும் உழவர் மன்றங்கள் குறித்து சென்ற இதழில் சில விபரங்களை அறிந்து கொண்டோம். இந்த இதழில் மேலும் பல விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

நபார்ட் வங்கி ஒரு வருடத்திற்கு ரூ. 10,000/- வீதம் 3 வருடங்களுக்கு நிதி உதவி வழங்கும். அதை உழவர் மன்றம் துவக்குவதற்கும், அடிப்படை நிலை பயிற்சி வகுப்புகள் நடத்தவும் மற்றும் வல்லுநர்களுடன் கலந்தாய்வு நிகழ்ச்சி நடத்துதல் போன்றவற்றிற்கும், இந்தத் தொகையை இரண்டு தவணையாக வழங்கும். இதில் 50% முன் பணமாகவும், மீதி 50% தொகையை செலவு செய்த பிறகும் ஈடு செய்யும்.

உழவர் மன்ற செயல்கள் யாவை?

வங்கிகளுடன் தொடர்பு கொண்டு விவசாயிகளுக்கு கடன்களை பெற்று தருவதுடன் திரும்ப செலுத்துதல் மூலம் நல்ல இணக்கமான உறவை ஏற்படுத்துதல் மூலம் வங்கிக்கும் கிராமத்திற்கும் பாலமாக செயல்படும்.

மாதத்திற்கு 2 - 3 முறை உழவர் மன்ற கூட்டங்கள் நடத்த வேண்டும்; கூட்டத்திற்கு உறுப்பினர்கள் இல்லாதவர்களையும் அழைத்து ஊக்குவிக்க வேண்டும்; விவசாய வல்லுநர்களை அழைத்து, விவசாய மேம் பாட்டிற்கு, கலந்தாய்வு கூட்டங்கள் நடத்துதல்; மற்ற கிராம (அ) மாவட்டத்தில் / மாநிலத்திலுள்ள நல்ல அனுபவம் வாய்ந்த, நல்ல முறையில் விவசாயம் செய்யும் விவசாயிகளை வரவழைத்து, அவர்களின் அனுபவத்தை, கூட்டத்தின் வாயிலாக, மற்ற விவசாயிகள் பயன் பெற செய்வது; விவசாயிகளை, அடுத்த மாவட்டம் (அ) மாநிலங்களுக்கு அழைத்துச் சென்று நேரிடையாக காணுதல் மூலம் புதிய விவசாய முறைகளை பின்பற்றவும், விளைச்சலைப் பெருக்கவும் ஏற்பாடு செய்தல் போன்றவை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் பெரிய பால் உற்பத்தியாளர்களுடன் தொடர்பு கொண்டு, கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் பாலை விற்பனை செய்ய உதவுவது; கிராமத்தில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து பொருட்களையும் சந்தைப்படுத்த ஏற்பாடு செய்தல்; சுய உதவிக் குழுக்களை துவங்கவும், அதை வழி நடத்தி, ஒவ்வொரு வீட்டின் வருமானத்தையும் பெருக்குதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன், கிராமத்தில் படித்த இளைஞர்களை, வங்கியின் வணிக தொடர்பாளர்களாக (BC) நியமிக்க ஏற்பாடு செய்தல்; அரசு துறைகளுடன் நல்லுறவு கொண்டு கிராமத் திற்குத் தேவையான பள்ளிக்கூடம், மின்சாரம், சாலை, போக்குவரத்து போன்ற வசதிகள் கிடைக்க ஏற்படுகள் செய்தல் போன்றவைகளாகும்.

மேலும் விவரங்களுக்கு, மாவட்ட முன்னேற்ற அதிகாரி (DDM) நபார்ட் மற்றும் அருகிலுள்ள வங்கி மேலாளரை அணுகவும்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மேற்கண்ட தகவல்களை கிராமத்திலுள்ளவர்களுக்கு தெரிவித்து, கலந்தாலோசித்து, உழவர் மன்றங்களை துவக்கி கிராமத்தில் உள்ள அனைவரும் அதிக அளவில் வருமானம் ஈட்ட உதவிட வேண்டும். ■

(தொடரும்)

பற்கள் பராமரிப்பு

மனிதனுக்கு பற்கள் இன்றியமையாத உறுப்பாகும். உண்ணும் உணவுப் பொருட்களை நன்றாக அரைத்து, அது எளிதில் செரிமானம் ஆக பற்கள் இன்றியமையாததது. முக அழகிற்கும், பேசுவதற்கும் பற்கள் மிக முக்கியம். உடலின் நுழைவாயிலான வாயை ஆரோக்கியமாக வைத்திருப்பது உடலில் பல நோய்கள் வராமலிருக்க வழி செய்யும்.

பற்களின் பாகங்களில் மிகவும் அதிகமாகப் பாதிக்கக் கூடியது பற்களைச் சுற்றியுள்ள ஈறுதான். பொதுவாக ஈறு நோய் வருவதின் முதல்கட்டம் நிறம் மாறுதல், ஈறு தடிப்பு, பல் ஈறுகளில் இருந்து இரத்தம் கசிதல் ஆகும். இயற்கையாகவே பல் ஈறுக்கும் பற்களுக்கும் இடையே சிறிது இடைவெளி இருக்கும். அதுவே ஈறு வியாதியால் பாதிக்கப்பட்டால் பெருமளவு ஆழமாகி ஒரு பை மாதிரி உருவாகி அதில் கிருமிகளும், அதில் இருந்து வெளிவரும் விஷப் பொருட்களும் மற்றும் உமிழ் நீரும் அடங்கி ஒரு பள்ளம் ஆகிறது.

இதனால் பற்களின் ஈறு மட்டும் அல்லாமல் பல் பிடிப்பிற்குக் காரணமாக இருக்கும் எலும்புகளும் மற்றும் லிக்மண்டுகளும் பாதிக்கப்பட்டு பற்களில் அசைவு ஏற்பட்டு முடிவாக தானாகவே பற்கள் விழுந்து விடும். இந்த வகையில் வியாதிகள் ஈறுகளில் ஏற்படும் பொழுது இரத்தம் கசிதல், வாயில் உள்ள உமிழ்நீர் வாய், தாடை போன்றவற்றில் பரவுதல் மற்றும் பிளாக் எனும் விஷக்கிருமிகள் கொண்ட வெண்படலம் பற்களின் ஈறுகளைச் சுற்றி படர்ந்து, கெட்டியாகி காரையாக மாறுதல் போன்றவை ஏற்படுகின்றன.

ஈறு நோய்க்கான சிகிச்சை

வருடத்திற்கு ஒருமுறை பற்களை சுத்தம் செய்து கொள்வதுடன், பற்காரையை அகற்றி, பற்களை பாதுகாக்க வேண்டும். மேலும் Ultra Sonic Scaler என்ற நவீன கருவி மூலம் பற்களை சுத்தம் செய்து கொள்ளலாம்.

பல் சொத்தை

பற்களில் ஏற்படும் சொத்தையானது கிருமிகளால் ஏற்படுகிறது. ஒட்டும் தன்மையுள்ள உணவுப் பொருட்கள் பற்களில் உள்ள குழிகளில் தங்கி, கிருமிகள் வளர வழி வகுத்து, பற்களை அரித்து, பல் சொத்தையை ஏற்படுத்துகிறது. பற்கூழைப் பாதிக்கும் போது வலி ஏற்படுகிறது.

பல் சொத்தைக்கான சிகிச்சை

சிறுபுள்ளியாகசொத்தைஏற்படும்போதேபல்மருத்துவரை அணுகி பல்லை அடைத்துக் கொள்வது நல்லது. முன் பற்களில் ஏற்படும் சொத்தையை காம்போசிட் எனப்படும் பல்லின் நிறம் கொண்ட சிமெண்டினால் அடைப்பதால் பாதிப்பில்லாமல் பல்லின் அழகு பாதுகாக்கப்படும்.

பற்களைப் பாதுகாக்க என்ன செய்யலாம்?

பற்களில் சிறு புள்ளியாக சொத்தை ஏற்படும் போதே பல் மருத்துவரை அணுகி பல்லினை அடைத்துக் கொள்வது நல்லது. பல் சொத்தை, பற்கூழ் பாதித்தாலும் வேர் சிகிச்சை எனம் நவீன சிகிச்சை (RCT) மூலம் பற்களைப் பாதுகாக்கலாம்.

பல் சொத்தையால் பல் வலி ஏற்படும் போது, மூக்குப் பொடி, புகையிலை, கற்பூரம் போன்றவைகளை வைப்பதால் அது புற்றுநோய் வருவதற்கு ஏதுவாகிறது. எனவே அதைத் தவிர்த்து பல் மருத்துவரை நாடி உரிய சிகிச்சையைப் பெற வேண்டும். ■

பற்களின் பாகங்களில் மிகவும் அதிகமாகப் பாதிக்கக் கூடியது பற்களைச் சுற்றியுள்ள ஈறுதான். பொதுவாக ஈறு நோய் வருவதின் முதல்கட்டம் ஈறின் நிறம் மாறுதல், ஈறு தடிப்பு, பல் ஈறுகளில் இருந்து இரத்தம் கசிதல் ஆகும்.

நம்ம ஊரு குழந்தைகளுக்கு ஏன் அடிக்கடி பேதி ஆகுது...?

– பிரம்மநாதன் கோ

பல நாள் கழித்து, என் தாத்தாவைப் பார்க்க, திண்டிவனம் அருகே ஒரு கிராமத்திற்குப் போய் இறங்கியதும் தான் தாமதம். 'ஓ'வென்ற அலறல் சத்தத்துடன் வேறொரு பஸ்சில் இருந்து ஒரு குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஆட்டோவில் பறந்தார்கள். என்னவென்று விசாரித்தால், 'மூணு நாளா பேதி! கண்டுக்கவே இல்லை! இப்போ குழந்தைக்கு இழுத்துக்கிட்டு இருக்கு!' என்றார். அவர்களை ஆட்டோ ஏற்றி அனுப்பிய பெரியவர். அருகிலிருந்த டீக்கடைக்காரர், 'எத்தனை பிள்ளைங்களுக்குய்யா பேதியாகும்? இந்த வாரத்திலேயே மூணு!'. 'மங்களம் பொண்ணு கூட செத்துப் போயிடல! என்ன பண்ணுவது? எல்லாம் கோயில் கொடையை ஒழுங்கா நடத்துனா இப்படியெல்லாம் ஆவுமா?' இயல்பாக சொல்லி விட்டு நகர்ந்தார் அந்தப் பெரியவர்.

பதற்றத்துடன் எனக்குத் தெரிந்த, சென்னையிலேயே பெரிய மருத்துவர் ஒருவருக்கு ஒரு போன் அடித்தேன். 'பேதிக்கு எல்லாம் உயிரேவா போயிடும்?' என்ற என் சந்தேகத் திற்குத்தான் மருத்துவர் தெளிவான விளக்கம் அளித்தார். 'பேதிக்கு (வயிற்றுப்போக்கு) பல்வேறு கிருமித் தொற்றுகள் காரணமாக இருக்கக் கூடும். ஒவ்வொரு கிருமிக்கும் வெவ்வேறு வீரியங்கள் இருக்கின்றன. ஆனால் எந்த கிருமி நம் உடலுக்குள் இருக்கிறதென்று யாருக்கும் தெரியாது.

அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவுடன் மருத்துவமனைக்குச் செல்லாவிட்டால் எப்படிப்பட்ட விபரீதமும் ஏற்படலாம்!'

அடுத்து நான் கேட்ட கேள்வி மிக முக்கியமானது. 'டாக்டர்! என் பிள்ளைகளுக்கோ, நகர்புறத்துல என் நண்பர்களுடைய பிள்ளைங்களுக்கோ பேதியெல்லாம் வந்து கேள்விப்பட்டதே கிடையாது. ஏன் டாக்டர் இந்த குக்கிராமங்கள்ல மட்டும் அடிக்கடி வருது?'

'கக்கூஸ் இல்லையே அதான்!' என்றார் பளிச்சென்று!.

திறந்தவெளியில் கிடக்கும் மலத்திலிருந்து எல்லா கிருமி களும், ஈக்கள், பூச்சிகள், பறவைகள், விலங்குகள் மற்றும் மனிதர்கள் மூலமாவும் ஊருக்குள் வந்து விடுகின்றன. உணவுப் பண்டங்களிலிருந்து, நாம் புழங்கும் எல்லா இடங்களிலும் கிருமிகளைப் பரப்புகிறது. நம்முடைய குழந்தைகள் தான் கைக்கழுவுவதும் இல்லை. உணவை மூடி வைப்பதும் இல்லையோ! போதாக்குறைக்கு, ஈ மொய்த்த பண்டங் களையும் சாப்பிடுகிறார்களே...? அதன் மூலம் அவர்களுடைய வாய்வழியாக உடலுக்குள் தான் செல்கிறது.

அவர் போனை வைத்தவுடன் தான் இந்தத் தொடர்பே விளக்க மாகப் புரிந்தது.

எதிரில் இருந்த பள்ளியின் வாசலில் ஒரு பாட்டி நாவப்பழமும், ஏதோ இனிப்பு மிட்டாயும் விற்றுக் கொண்டிருந்தார். அவர் தட்டில் நவாப்பழங்களை விட ஈக்களே அதிகமாக இருந்தன. இன்னும் சற்று நேரத்தில் பள்ளி இடைவேளைக்குப் பிள்ளைகள் வந்து விடுவார்கள். நவாப்பழங்களை விற்று விடலாம் என்று ஆவலாகக் காத்திருந்தார் பாட்டி.

அவைகளைச் சாப்பிடும் நம் குழந்தைகளுக்குத்தானே பேதியும் மயக்கமும் வரும்? அந்தக் குழந்தைகளிடம் அதை விளக்கிச் சொல்லி யார் அவர்களை தடுப்பார்கள்? அது மட்டுமின்றி, நம் ஊரில் பெரியவர்கள் திறந்த வெளியில் மலம் கழிப்பதால் நமது குழந்தைகள் அல்லவா பாதிக்கப்படுகிறார்கள்? பெரியவர்கள் அனைவரையும் கக்கூஸில் மலம் கழிக்கச் சொல்லி யார் கட்டாயப்படுத்துவார்கள்? என்னுடைய ஆழ்ந்த சிந்தனையை ஒரு செல்போனின் ஒலி கலைத்தது. சீரிஸாக இருந்த குழந்தையை ஆட்டோவில் ஏற்றிவிட்ட அதே பெரியவரின் செல்போன். நிச்சயம் குழந்தையை தூக்கிச் சென்றவர்கள்தான் பேச வேண்டும்! குழந்தைக்கு ஒன்ன ஆயிருக்குமோ என்று மனம் பதைபதைத்தது. பெரியவர் போனை எடுத்து பேச ஆரம்பித்தார்!

'ஹலோ! ஹலோ...!' எவ்வளவோ முயற்சித்தும் காதில் விழவேயில்லை. பேசியபடி பெரியவர் மற்றொரு ஆட்டோவில் ஏறி அவசரமாகப் போய்விட்டார். ஆனால் ஒரு உறுதியை மட்டும் எடுத்துக் கொண்டேன். என் தாத்தா மூலம் கிராம மக்கள் அனைவரையும் உடனே கக்கூஸ் கட்டச் சொல்லி வலியுறுத்த வேண்டும்! நம்ம ஊரு குழந்தைகள் தானே நம்ம ஒவ்வொருத்தரோட எதிர்காலம்...? ■

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல்பாடுகள் ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் தலைமையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் செயல்பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் 28.11.2014 அன்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. ஊரக வளர்ச்சி (ம)ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு. நா. ச. பழனியப்பன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் திரு. கா. பாஸ்கரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., மற்றும் கூடுதல் இயக்குநர்கள், துறை அலுவலர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். ■

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த புத்தறிவு பயிற்சி

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் 31 மாவட்டங்களில் 20 மாவட்டங் களுக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள திட்ட இயக்குநர்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்த புத்தறிவு பயிற்சி அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம் பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் கூடுதல் திட்ட இயக்குநர்கள் திருமதி. எம், மாதவி, திரு. எல். ராஜா அவர்கள் இயக்கம் குறித்து எடுத்துரைத்தார். அனைத்து மாவட்ட திட்ட இயக்குனர்களும் இந்தப் பயிற்சியில் கலந்து கொண்டனர். மேலும் புதுவாழ்வு திட்ட மாவட்ட மேலாளர்கள் திரு. நித்தியானந்தம் மற்றும் திரு. சம்பத்குமார் ஆகியோர் புதுவாழ்வு திட்டம் குறித்து விளக்கிக் கூறினர். ■

↘ திருநெல்வேலி

குறை தீர்க்கும் கூட்டம்

தமிழக அரசின் அறிவிப்பின்படி இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை இரண்டாவது புதன்கிழமை அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் சுய உதவிக் குழுக்களின் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற்று வருகிறது. 12.11.2014 அன்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் சுய உதவிக் குழுக்களின் குறைதீர்க்கும் இரண்டாவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 9 மறுசீரமைக்கப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 1 இலட்சம் வீதம் ரூ. 9 இலட்சம் மற்றும் பருத்திப்பாடு ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடனாக ரூ. 12 இலட்சமும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட அலுவலர் திரு. வை. ஜெயக்குமார், முன்னோடி வங்கி மேலாளர் திரு. அழகர்சாமி, பல்வேறு வங்கிகளின் மேலாளர்கள், அனைத்துத் துறை அலுவலர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் கூட்டமைப்புகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ■

↘ அரியலூர்

வங்கியாளர்களுக்கு விருது

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பிரதான கூட்ட அரங்கில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் வங்கியாளர்களுக்கான புத்தாக்க பயிற்சி நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியர் திரு. எ. சரவணவேல் ராஜன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியதுடன், அரியலூர் மாவட்டத்தில் செயல்படும் கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக் களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்கியதில் சிறப்பாக செயல்பட்ட திருச்சி மாவட்டத்தின் மத்திய கூட்டுறவு வங்கி, இந்தியன் வங்கி மற்றும் பாரத மாநில வங்கி ஆகிய வற்றிற்கு விருதுகளையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட இயக்குனர் / இணை இயக்குநர் திரு. எஸ். சாமுவேல் இன்பதுரை, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சுந்தரேஸ்வரன், முன்னோடி வங்கி மேலாளர் திரு. முரளி கிருஷ்ணன், கூட்டுறவு இணைப் பதிவாளர் திருமதி. மிருணாளினி, வல்லுநர் சுதந்திரன், உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு வங்கிகளின் மேலாளர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

↘ சென்னை

கல்லூரிச் சந்தை

சென்னை மாவட்ட மகளிர் திட்டம் மற்றும் ஸ்டெல்லா மேரீஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து நடத்திய சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி பொருட்களின் விற்பனைக் கண்காட்சி ஸ்டெல்லா மேரீஸ் கல்லூரி வளாகத்தில் 03.12.2014 முதல் 06.12.2014 வரை நடைபெற்றது. இக்கண்காட்சியினை மகளிர் திட்ட கூடுதல் இயக்குநர் திருமதி. மாதவி அவர்கள் துவக்கி வைத்தார். சென்னை மாவட்ட மகளிர் திட்ட அலுவலர், உதவித் திட்ட அலுவலர்கள், கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இக்கண்காட்சியில் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுவினர் தயாரித்த காகிதப் பொருட்கள், சணல் பொருட்கள், மரப் பொம்மைகள், வீட்டு தயாரிப்பு சாக்லேட்டுகள், கைவினைப் பொருட்கள், செயற்கை ஆபரணங்கள், ஆயத்த ஆடைகள், உணவுப் பொருட்கள் உட்பட பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. ■

↘ விருதுநகர்

வங்கியாளர்களுக்கான கருத்தரங்கு

விருதுநகர் மாவட்டத்தில் ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், அனைத்து வங்கியாளர் களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு 20.11.2014 அன்று சிவகாசி ஸ்பார்க்கிள் – இன் ஹோட்டலில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் திரு. த.ந. ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள் இக்கருத்தரங்கினை துவக்கி வைத்தார். மாவட்ட திட்ட இயக்குநர் திரு. வே. பிச்சை அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. முனுசாமி, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. கே. சுப்பிரமணியன், நபார்டு வங்கி துணைப் பொது மேலாளர் திரு. ஜே. சுப்பிரமணியன், மாவட்ட ஊரக சுய தொழில் பயிற்சி நிறுவன இயக்குநர் திரு. இராமச்சந்திரன், பாண்டியன் கிராம வங்கி பொது மேலாளர் திரு. பெரியசாமி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் மகளிர் மேளா கிறிஸ்துமஸ் புத்தாண்டு மற்றும் பொங்கல்

விற்பனைக் கண்காட்சி

தமிழ்நாடு அரசு, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறது. சுய உதவிக் குழு மகளிர் தயாரிக்கும் பொருட்களின் விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடவும், அப்பொருட்களை சந்தைப்படுத்திடவும், கிராம அங்காடிகள், கல்லூரி சந்தைகள், மாவட்ட அளவிலான சாராஸ் கண்காட்சிகள், மாநில / தேசிய அளவிலான கண்காட்சிகள் என பல்வேறு கண்காட்சிகள் மூலமாக பிரபலப்படுத்தி மகளிரின் முன்னேற்றத்திற்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், அரசின் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழகத்தில் உள்ள அனைத்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திடும் நோக்கிலும், விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடும் வகையிலும், சென்னையில் பண்டிகை மற்றும் விடுமுறை காலங்களில் மாநில அளவிலான விற்பனைக் கண்காட்சிகள் மூலமாக பல்வேறு விற்பனை வாய்ப்புகளை மகளிர் குழுக்களுக்கு ஏற்படுத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, சென்னை, நுங்கம்பாக்கம், வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் மகளிர் மேளா 'கிறிஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல் விற்பனைக் கண்காட்சி மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புகளின் விற்பனை மையம் ஆகியவற்றை' 19.12.2014 அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் துறை அமைச்சர் திருமதி. பா. வளர்மதி அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் திருமதி. எஸ். கோகுலஇந்திரா அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் கூடுதல் இயக்குனர்கள் திரு. ட்டி. ஆர். வேதநாயகம், திருமதி. எம். மாதவி, புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர்கள் திரு. எல். ராஜா, திரு. ஆர். ராஜசேகர் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்த விற்பனைக் கண்காட்சி 19.12.2014 முதல் 11.01.2015 வரை, காலை 10.30 மணிக்கு தொடங்கி இரவு 08.30 மணி வரை நடைபெறும். அனைத்து பண்டிகை விடுமுறை நாட்கள் மற்றும் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளிலும் இக்கண்காட்சியில் விற்பனை நடைபெறுகிறது.

இந்த விற்பனைக் கண்காட்சியில் சுய உதவிக் குழு மகளிர் தயாரித்த தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், வண்ண வண்ண பருத்தி, பட்டு மற்றும் செயற்கை இழை

புடவைகள், மங்கையர் மனம் மயக்கும் செயற்கை ஆபரணங்கள், காகிதம், சணல், களிமண், பீங்கான் ஆகியவற்றினால் உருவான பொம்மைகள், பனை ஓலை மற்றும் பாக்கு மட்டைப் பொருட்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நவநாகரீக ஆயத்த ஆடைகள், புளி, தேன், ராகி, சாமை, குதிரைவாலி அரிசி, ரோஸ்குல்கந்து மற்றும் மூலிகைப் பொருட்கள், நீலகிரி தைலம், தரமான டீ மற்றும் காபித்தூள், சுவையும் சத்தும் மிகுந்த உணவுகள், கிராமிய சுவை நிறைந்த ருசியான தின்பண்டங்கள், தேங்காய் நார், சணல், துணி ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்ட மிதியடிகள், தரமான தோலினால் தயாரிக்கப்பட்ட பர்ஸ்கள், கைப்பைகள், பெல்டுகள், கலைநயம் மிகுந்த சணல் பைகள், மூங்கில் பொருட்கள் போன்றவை விற்பனைச் செய்யப்படுகின்றன.

இந்த விற்பனைக் கண்காட்சியில் 32 மாவட்டங்களைச் சேர்ந்த மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம், சுனாமிக்குப் பிந்தைய வாழ்வாதாரத் திட்டம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் குழுக்களைச் சார்ந்த 110 குழுக்கள் 55 அரங்குகளை அமைத்துள்ளனர். மாண்புமிகு மிகுந்த சணல் பைகள், மூங்கில் பொருட்கள் போன்றவை விற்பனைச் செய்யப்படுகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமாகவும், நியாயமான விலையிலும் இருப்பதால் ஏராளமான பொதுமக்கள் கண்காட்சிக்கு வருகை தந்து, தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்கின்றனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், அவர்தம் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு ஏற்படுத்தி தரும் வகையிலும் நடைபெறும் இக்கண்காட்சியில், பொதுமக்களும் தங்களுக்குத் தேவையான பொருட்களை தரமாகவும், நியாயமான விலையிலும் வாங்கிடும் வண்ணம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதுமட்டுமல்லாது பாரம்பரிய கிராமிய சுவை மிகுந்த தின்பண்டங்களை ருசித்த வண்ணம் கிறிஸ்துமஸ் – புத்தாண்டு – பொங்கல் பண்டிகைகளைக் கொண்டாட இந்தக் கண்காட்சி ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்றால் அது மிகையில்லை. ■

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திடும் நோக்கிலும், விற்பனை வாய்ப்பினை மேம்படுத்திடும் வகையிலும், சென்னையில் பண்டிகை மற்றும் விடுமுறை காலங்களில் மாநில அளவிலான விற்பனைக் கண்காட்சிகள் மூலமாக பல்வேறு விற்பனை வாய்ப்புகளை மகளிர் திட்டம் ஏற்படுத்தி வருகிறது.

அமைச்சர் பெருமக்கள் சுய உதவிக் குழுவினர் அமைத்திருக்கும் அரங்குகளைப் பார்வையிட்டு, மகளிர் சுய உதவிக் குழுப் பெண்கள் தயாரித்த பொருட்கள் குறித்த விபரங்களை கேட்டறிந்தனர்.

இந்த விற்பனை அரங்குகளில் தரமான வீட்டு உபயோகப் பொருட்கள், வண்ண வண்ண பருத்தி, பட்டு மற்றும் செயற்கை இழை புடவைகள், மங்கையர் மனம் மயக்கும் செயற்கை ஆபரணங்கள், காகிதம், சணல், களிமண், பீங்கான் ஆகியவற்றினால் உருவான பொம்மைகள், பனை ஓலை மற்றும் பாக்கு மட்டைப் பொருட்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நவநாகரீக ஆயத்த ஆடைகள், புளி, தேன், ராகி, சாமை, குதிரைவாலி அரிசி, ரோஸ்குல்கந்து மற்றும் மூலிகைப் பொருட்கள், நீலகிரி தைலம், தரமான டீ மற்றும் காபித்தூள், சுவையும் சத்தும் மிகுந்த உணவுகள், கிராமிய சுவை நிறைந்த ருசியான தின்பண்டங்கள், தேங்காய் நார், சணல், துணி ஆகியவற்றினால் தயாரிக்கப்பட்ட மிதியடிகள், தரமான தோலினால் தயாரிக்கப்பட்ட பர்ஸ்கள், கைப்பைகள், பெல்டுகள், கலைநயம்

நம் மாவட்டம்

கிருஷ்ணகிரி

வங்கியாளர்களுக்கு அறிமுகப் பயிற்சி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து வங்கியாளர்களுக்கான அறிமுகப் பயிற்சி, 13.11.2014 மற்றும் 14.11.2014 வரையிலும், 20.11.2014 முதல் 22.11.2014 வரையிலும் 5 கட்டங்களாக நடைபெற்றது. மாவட்ட திட்ட இயக்குநர் திரு. கோ. இராமையா தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. ருத்ரப்பா, நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் திருமதி. நஷ்ரீன் சலீம், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. குமரன், பயிற்றுனர் திரு. மன்னதன், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் வங்கி அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

தருமபுரி

வங்கியாளர்களுக்கு விளக்கப் பயிற்சி

தருமபுரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் புதுவாழ்வு திட்டம் சார்பில் வங்கியாளர்களுக்குப் பயிற்சி 06.11.2014 முதல் 11.11.2014 வரை நடைபெற்றது. தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு. கே. விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் பயிற்சியை துவக்கி வைத்து, ஆறு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவியாக ரூ. 28 இலட்சம் வழங்கியதுடன், திட்ட விளக்க கையேடு மற்றும் மான்யக் கடன் குறித்த கையேடு ஆகியவற்றை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில் வாழ்வாதார இயக்க திட்ட இயக்குனர் மற்றும் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர், உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கடலூர்

வறுமை ஒழிப்புச் சங்கங்களுக்கு நிதி

கடலூர் மாவட்டத்தில் ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் அண்ணாகிராமம், பண்ருட்டி, கீரப்பாளையம், கடலூர் மற்றும் கம்மாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் முதல் கட்டமாக 255 கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களும், இரண்டாம் கட்டமாக குறிஞ்சிப்பாடி, பரங்கிப்பேட்டை, மேல் புவனகிரி மற்றும் குமராட்சி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 196 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களும் அமைக்கப்பட்டுள்ளன. 15.11.2014 அன்று கடலூர் நகர அரங்கில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு, 182 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு நிதி உதவியாக ரூ. 2,95,00,000/–ஐ வழங்கினார். முன்னதாக மாவட்ட வாழ்வாதார திட்ட இயக்குநர் வரவேற்புரை வழங்கினார். இவ்விழாவில் கிராம வறுமை ஒழிப்பு சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளின் செயலாளர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் வட்டார திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர். ■

பெரம்பலூர்

மாற்றுத் திறனாளிகள் \ நலிவுற்றோர்களுக்கு கடன் உதவி

பெரம்பலூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராம வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்களில் 5 நலிவுற்றோர் மற்றும் 5 மாற்றுத் திறனாளிகளுக்கு சமுதாய முதலீட்டு நிதியிலிருந்து வாழ்வாதார கடனுதவியாக காசோலைகளை 17.11.2014 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் டாக்டர் தரேஸ் அஹமது, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். மேற்படி நிகழ்ச்சியில் மகளிர் திட்ட அலுவலர் திருமதி. கோ. மலர்விழி, உதவித் திட்ட அலுவர்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். ■

சென்னை

மாநில அளவிலான வங்கி தலைமை மற்றும் மண்டல அதிகாரிகள் கூட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன்கள் குறித்து மறு ஆய்வு மற்றும் புதிய கடன்கள் வழங்குவது தொடர்பாக மாநில அளவிலான வங்கி தலைமை மற்றும் மண்டல அதிகாரிகள் கூட்டம், 12.12.2014 அன்று சென்னை அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை நிர்வாக அலுவலர் /மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், நபார்டு வங்கி மற்றும் மத்திய ரிசர்வ் வங்கி உள்பட மாநில அளவிலான பல்வேறு வங்கிகளின் பொது மேலாளர்கள், உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். ■

இராமநாதபுரம்

மகளிர் விழிப்புணர்வு மனிதச் சங்கிலி

இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் சமூக நலத்துறை சார்பில் 'மகளிர் விழிப்புணர்வு மனிதச் சங்கிலி' 25.11.2014 அன்று இராமநாதபுரம் அரண்மனை முன்பு நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சமுதாயத்தில் மகளிரின் பங்கு, மகளிரின் சட்ட உரிமைகள் போன்றவை குறித்த வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி 100க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழு மகளிர் கலந்து கொண்டனர். இராமநாதபுரம் மாவட்ட வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் டாக்டர். ம. ஜெயராமன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. மலையரசி மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் இந்த மனித சங்கிலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ■

கன்னியாகுமரி

வங்கியாளர்களுக்குப் பயிற்சி

கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் வங்கியாளர்களுக்கு, வாழ்வாதார இயக்கம் குறித்த முதல் பயிற்சி முகாம் 06.11.2012 அன்று நாகர்கோவில் ரோட்டரி ஹாலில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி முகாமினை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்த நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட திட்ட இயக்குநர் (பொ) திரு. மு. கல்யாணசுந்தரம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதுநிலை மண்டல மேலாளர் திரு. N. M. சிவசாமி, முன்னோடி வங்கி மேலாளர் திரு. S. விஸ்வநாதன், RSETI இயக்குநர் திரு. இராதாகிருஷ்ணன், மாவட்ட வளர்ச்சி மேலாளர் (நபார்டு) திரு. மார்டின் பிரகாசம், KDCC பொது மேலாளர் திரு. கனகராஜ், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் பல்வேறு வங்கிகளின் மேலாளர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், வளப்பயிற்றுநர் உட்பட பலர் கலந்து கொண்டார்கள். ■

புதுக்கோட்டை

வங்கியாளர்களுக்கான ஒருநாள் பயிற்சி

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் குறித்து வங்கியாளர்களுக்கு ஒருநாள் பயிற்சி 6 கட்டங்களாக நடைபெற்றுள்ளது. அறந்தாங்கி. மணமேல்குடி மற்றும் ஆவுடையார் கோவில் பகுதியில் உள்ள 64 வங்கிகளின் மேலாளர்களுக்கான 6வது கட்ட பயிற்சி 05.12.2014 அன்று அறந்தாங்கி இளங்கோ திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் திரு. சு. கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்த இப்பயிற்சியில் புதுக்கோட்டை மாவட்ட வாழ்வதார இயக்க திட்ட இயக்குநர் திரு. க. இளங்கோ, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. ராமசாமி, உதவிப் பொது மேலாளர் (நபார்டு) திரு. தேனப்பன், முதன்மை பயிற்றுநர் மற்றும் உதவித் திட்ட அலுவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

(நாடகம்)

பூக்கள்

மனநலம் பாதிப்புப் பற்றி ஒரே மாதிரியான கருத்துக்களை மக்களிடையே எடுத்துச் சொல்லவும், மனநோய் தடுப்பு மற்றும் மனநோய் பாதிக்கப்பட்டவர்களை மனித நேயத்துடன் அணுகுவதற்கும் தமிழ்நாடு புதுவாழ்வுத் திட்டம் உருவாக்கியுள்ள இரண்டு விழிப்புணர்வு நாடகங்களில் ஒன்றான 'பூக்கள்' என்ற நாடகம் முற்றத்தில் தொடர்கதையாக வெளியிடப்படுகிறது. கடந்த மாத கதையின் தொடர்ச்சியை இந்த இதழில் காணலாம்.

ஏய்... பாப்பா... நில்லு... நில்லு...

என்ன டிரைவர் அண்ணா?

இளவரசிய பார்த்தியா? அவ மட்டும் வரலையே ஏன்?

அவளா அண்ணே... ஸ்கூல் காம்பவுண்டுக்கு பக்கத்திலே இருக்கிற மரத்தடியில உட்கார்ந்திருக்கா..,

ஏம்மா... நீங்க யாராவது அவளை கூட்டிட்டு வரக் கூடாதா?

சரி நீங்க போங்க... நான் அவளை கூட்டிட்டு வரேன். இந்தப் பொண்ணுக்கு என்ன ஆச்சி? கொஞ்ச நாளா இப்படி இருக்கா? இவள தேடுறதே என்னோட வேலையாப் போச்சி... (தேடி போய் அவளைக் கூப்பிடுதல்)

டிரைவர் அண்ணா... டிரைவர் அண்ணா... நாங்க கூப்பிட்டோம். அவ வரல...

இளவரசி... இளவரசி... நீ இங்க தனியா உட்கார்ந்து என்ன பண்ணுற. உன்ன காணோமுன்னு தேடி வரதாப் போச்சு. வாப்பா வீட்டுக்கு போகலாம். இட நான் கூப்பிட்டுகிட்டே இருக்கே... நீ பாட்டுக்கு உட்கார்ந்திக்கிட்டே இருக்க... அட வாம்மா...

(கையை பிடித்து இழுத்தல்)
(இளவரசி டிரைவர் கையை உதறிவிட்டு எழுந்து வேனுக்கு செல்லுதல்)
காட்சி உரைதல்

இசைக்கொத்து : என்னாச்சிதோ... ஏதாச்சிதோ...
சின்ன பொண்ணு இவளுக்கு தான்...
கள்ளம் இல்லா உள்ளத்திலே
என்னவாகிப் போயிருச்சோ...

(இசைக்கொத்து பாடல்)
(இருவர் வீட்டைக் காட்டுதல்)
(இளவரசி பள்ளியில் இருந்து வீட்டிற்கு வருதல்)

(தொடரும்)

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people to overcome poverty

நாகை மாவட்டத்தில் இயற்கை வேளாண் இடுபொருள் உற்பத்தி மற்றும் விற்பனை மையம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் பல்வேறு வாழ்வாதாரத் திட்டங்களை சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒரு பகுதியாக மதுரையைச் சேர்ந்த The Covenant Centre for Development - CCD என்ற தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் நாகை மாவட்ட கடலோர பகுதிகளில் உள்ள 'மா' விவசாயிகள் ஒருங் கிணைக்கப்பட்டுள்ளனர். தலைஞாயிறு ஒன்றியத்தில் 887 'மா' விவசாயிகளுடன் 51 உற்பத்திக் குழுக்கள் உரு வாக்கப்பட்டு, 'திருமறைக்காடு கடலோர விவசாயிகள் டிரஸ்ட்' (TKVT) என்ற நிறுவனம் துவங்கப்பட்டுள்ளது. திருமறைக்காடு கடலோர விவசாயிகள் டிரஸ்ட் உறுப்பினர்கள் இயற்கை முறையில் மா, காய்கனி மற்றும் மூலிகைப் பயிர்கள் சாகுபடி செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இயற்கை விவசாயத்திற்குத் தேவையான இடுபொருட் களாகிய உயிர் உரங்கள், உயிர் பூச்சிக் கொல்லிகள், மூலிகை பூச்சி விரட்டிகள், மண்புழு உரம், பயிர் வளர்ச்சியூக்கிகள், பஞ்சகவ்யா, அமிர்த கரைசல் ஆகியவை அறிவியல் ரீதியாக, வல்லுநர்களால் தயாரிக்கப்பட்டு, குறைந்த விலையில் விற்பனை செய்ய ஏதுவாக, இயற்கை வேளாண் இடுபொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை மையத்தை மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. எ. கதிர்வேல் துவங்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு. கணேஷ், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்ட முதுநிலை ஊரக வளர்ச்சி மேலாளர் திரு. லஷ்மி நாராயணன், மாவட்ட விவசாயத் துறை இணை இயக்குநர் மற்றும் விவசாயிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ■

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. **விக்ரம் கபூர்,** இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்
திரு. A. R. கிளாட்ஸ்டன் புஷ்பராஜ், கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன், தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

இயற்கை விவசாயத்திற்குத் தேவையான இடுபொருட்களாகிய உயிர் உரங்கள், உயிர் பூச்சிக் கொல்லிகள், மூலிகை பூச்சி விரட்டிகள், மண்புழு உரம், பயிர் வளர்ச்சியூக்கிகள், பஞ்சகவ்யா, அமிர்த கரைசல் ஆகியவை அறிவியல் ரீதியாக, வல் லுநர்களால் தயாரிக்கப்பட்டு, குறைந்த விலையில் விற்பனை செய்ய ஏதுவாக, இயற்கை வேளாண் இடுபொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை மையம் அமைந்துள்ளது.

மாவட்ட செயலாக்க அலுவலர்கள் மற்றும் கூட்டுவள மைய பணியாளர்களுக்கு கணினிப் பயிற்சி

109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வரவு செலவுகளை எளிய முறையில் கணினி மூலம் பராமரிக்க தமிழ் மொழியில் MS Tally என்ற மென்பொருள் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு, அதில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் 109 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வரவு செலவுகளை எளிய முறையில் கணினி மூலம் பராமரிக்க தமிழ் மொழியில் MS Tally என்ற மென்பொருள் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டு, அதில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் வரவு செலவுகளை புத்தக பராமரிப்பாளர்கள் கணினியில் பதிவு செய்யும் போது அவர்களுக்கு ஏற்படும் ஐயங்களை நிவர்த்தி செய்ய உதவிடவும், பிற திட்டப் பணியாளர்கள், இப்பணியை தெளிவாகத் தெரிந்து கொள்ளவும் மாவட்ட திட்ட செயலாக்க அலுவலகங்களிலுள்ள கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர்கள், திட்ட உதவியாளர்கள், கணக்கு உதவியாளர்கள் மற்றும் கூட்டு வள மையப் பணியாளர்களுக்கு சென்னையில் உள்ள சுகாதார மற்றும் குடும்பநல இயக்ககப் பயிற்சி மையத்தில் 14.10.2014 முதல் 20.11.2014 வரை பயிற்சி அளிக்கப்பட்டது.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் விவரங்களையும், திட்டம் சார்ந்த பிற விவரங்களையும் பதிவு செய்தல், MS Tally மென்பொருள் பயன்பாட்டின் போது ஏற்படும் பிரச்சனைகளை சரி செய்தல், அறிக்கைகளை ஒருங்கிணைத்து திட்ட மேலாண்மை அலகிற்கு அனுப்புதல் போன்றவை குறித்து பயிற்சியாளர்களுக்குத் தெளிவாக விளக்கப்பட்டது. ■

கூட்டுப்பொறுப்புக் குழுக்கள் மூலம் காய்கறிகள் உற்பத்தி செய்தல்

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு ஒன்றியம், கோவில்பத்து ஊராட்சியில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் NABFINS நிறுவனத்தின் நிதி உதவியுடன் கூட்டுப் பொறுப்புணர்வுக் குழுக்களால் (JLC) காய்கறி சாகுபடி செய்தல் குறுந்தொழிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கூட்டுப் பொறுப்புக் குழு பயனாளிகளில் ஒருவரான பொன்னரசி கூறுகையில்,

என்னுடைய பெயர் பொன்னரசி, நான் மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவள், நாள் நாகப்பட்டினம் மாவட்டம் கோவில்பத்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் ஸ்ரீ அம்பிகை மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இருந்து வருகிறேன். என்னுடைய கணவர் முருகையன் விவசாய கூலி வேலை செய்து வருகிறார். சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் NABFINS நிறுவனத்தின் உதவியுடன் நானும் மற்றும் இரு நபர்களும் (சித்ரா மற்றும் மஞ்சுளா) சேர்ந்து கூட்டுப் பொறுப்புக் குழு அமைத்து, காய்கறி சாகுபடி தொழில் செய்ய தேவையான பயிற்சிகளைப் பெற்றோம். அத்துடன் ரூ. 1,48,200/- கடனுதவியும் அளித்தனர்.

நாங்கள் மூவரும் தலா ஒரு ஏக்கர் வீதம் வெண்டை, கத்திரி, கொத்தவரை, கடலை மற்றும் கீரை வகைகள் போன்ற காய்கறிகளை சாகுபடி செய்து வருகின்றோம். அதன் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக ரூ. 1000/- வீதம் வருவாய் கிடைக்கிறது. கிடைக்கின்ற வருமானத்தை வைத்து கடன் தொகையை தவணை தவறாமல் மீள செலுத்தி வருகிறேன். அதுமட்டுமல்லாது தற்போது எனது 2 மகன்களையும் கல்லூரியில் படிக்க வைத்துள்ளேன். மேலும் தற்போது நான் சொந்த வீடு கட்டி வருகிறேன். இவ்வாறு என் குடும்ப வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மேன்மேலும் சிறப்புற வாழ்த்துகிறேன். ■

நாங்கள் மூவரும் தலா ஒரு ஏக்கர் வீதம் வெண்டை, கத்திரி, கொத்தவரை, கடலை மற்றும் கீரை வகைகள் போன்ற காய்கறிகளை சாகுபடி செய்து வருகின்றோம். அதன் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக ரூ. 1000/- வீதம் வருவாய் கிடைக்கிறது.

இடைநிலை ஆலோசனைக் குழு ஆய்வு

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பணிகளை 21.11.2014 முதல் 28.11.2014 வரை ஆய்வு செய்த இடைநிலை ஆலோசனைக் குழு தேவையான ஆலோசனைகளை வழங்கியது. இக்குழு சார்பாக திருமதி. கிரிஜா சீனிவாசன் மற்றும் திட்ட மேலாண்மை அலகின் அலுவலர்கள் நாகப்பட்டினம், கடலூர், விழுப்புரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களின் நடைபெறும் அனைத்துத் திட்டப் பணிகளையும் ஆய்வு செய்தனர்.

கடலூர் மாவட்டம், வில்லிய நல்லூர் ஊராட்சியில் வி. பஞ்சங் குப்பம் கிராமத்தில் தானம் அறக்கட்டளையில் இணைந்து செயல் படுத்தப்படும் கறவை மாடு வளர்ப்புத் திட்ட பயனாளிகளுடன் கலந்துரையாடினர். இளந்தென்றல் மற்றும் மாரியம்மன் ஆகிய மகளிர் சுய உதவிக் குழுக்களிலிருந்து 18 உறுப்பினர்கள் இதில் பங்கேற்றனர்.

வி. பஞ்சங்குப்பம் கிராமத்தில் செயல்பட்டு வரும் களஞ்சியம் பால் கொள்முதல் நிலையத்தின் மூலம் தினமும் காலையில் 70 லிட்டரும், மாலையில் 60 லிட்டரும் பால் கொள்முதல் செய்யப்படுகின்றது. தானம் அறக்கட்டளையின் கால்நடை தொழில்நுட்ப உதவியாளர்கள் மூலம் கறவை மாடுகளுக்கு வேண்டிய மருத்துவ உதவி, அமுல் பால் உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் கொள்முதல் குறித்து திருமதி. கிரிஜா சீனிவாசன் பயனாளிகளுக்கு விளக்கினார்.

பயனாளிகளால் பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகளான தனிநபர் புத்தகம், கடன் விபரம், ரொக்க ரசீது, தீர்மானப் புத்தகம் ஆகியவை குறித்து அறிவுரை வழங்கப்பட்டது. பயனாளிகள் அனைவரும் தங்கள் கறவை மாடு களை நேரில் காண்பித்தனர்.

மேலும் பல திட்ட நடவடிக்கைகளை ஆய்வு செய்தபின் 27.111.2014 அன்று குறுந்தொழில் வளர்ச்சி தொடர்பாக திட்ட ஆலோசகர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. 28.11.2014 அன்று ICICI வங்கியைச் சார்ந்த திரு. சி. ஸ்ரீகிருஷ்ணன் அவர்களுடன் வங்கி கடன் இணைப்பு ஆலோசனை நடத்தப்பட்டது. இறுதியாக 28.11.2014 அன்று திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., மற்றும் திட்ட மேலாண்மை அலகின் பிற அலுவலர்களுடன் திட்டத்தை மேலும் சிறப்பாக செயல்படுத்த ஏதுவாக ஆலோசனை வழங்கப்பட்டது. ■

வருவாய் பெருக்கும் கால்நடை வளர்ப்பு பயிற்சி

விழுப்புரம் மாவட்டம் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் எட்டு ஊராட்சிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 44 பயனாளிகளுக்கு Hand in Hand நிறுவனத்தாரால் கால்நடை வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. முதல் கட்டமாக 02.12.2014 முதல் 04.12.2014 முடிய மூன்று நாட்களும், இரண்டாம் கட்டமாக 02.12.2014 முதல் 04.12.2014 முடிய மூன்று நாட்களும் ஆக 6 நாட்கள் முறையே கூனிமேடு மற்றும் கீழ்பேட்டை மையங்களில் பயிற்சி கொடுக்கப்பட்டது.

சென்னை திட்ட மேலாண்மை அலகின் கூடுதல் இயக்குனர், கீழ்பேட்டை மற்றும் கூனிமேடு பயிற்சி மையங்களில் 21.11.2014 அன்று ஆய்வு மேற்கொண்டு, பயிற்றுநர்கள் டாக்டர். பவானி, டாக்டர். சங்கீதா ஆகியோரிடம் பயனாளிகள் தெளிவாகவும் எளிமையாகவும் புரிந்து கொள்ளும் வகையிலும் பயிற்சி அளிக்க கேட்டுக் கொண்டார். கால அட்டவணை தமிழில் இருக்க வேண்டும் எனவும், கையேடுகளைப் பார்த்து மிகவும் பயனுள்ளதாகவும், விளக்கப் படங்கள் விரிவான முறையில் பயனாளிகள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும், கால்நடை வளர்ப்பில் செய்யக் கூடியவை, செய்யக் கூடாதவை குறித்து இரண்டு பக்கங்கள் குறிப்பெடுத்து பயனாளிகளிடம் வழங்கிடுமாறும் பயிற்றுனர்களிடம் கேட்டுக் கொண்டார்.

வருவாய் பெருக்கும் தொழில்களில் பயிற்சி பெற்ற தனி நபருக்கோ அல்லது கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கோ கடனுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கடன் பெறும் பயனாளிகள் தொழிலில் அறிவும், ஆர்வமும், அனுபவமும் உள்ளவராக இருக்க வேண்டும். தனி நபருக்கு அதிகபட்சம் கடன் தொகை ரூ. 20,000/- வழங்கப்படும். தனிநபர் கடன் கோரும் பயனாளிகள் 20 சதவீத பங்களிப்பு செலுத்திய பின் கூட்டமைப்பால் 80 சதவீதம் விடுவிக்கப்படும். ஆண்டுக்கு 122 சதவீத வட்டி வசூலிக்கப்படும். கடன் தொகை 24 தவணைகளில் திருப்பி செலுத்த வேண்டும் என்பது போன்ற அனைத்து விவரங்களும் எடுத்துரைக்கப்பட்டது. ■

வருவாய் பெருக்கும் தொழில்களில் பயிற்சி பெற்ற தனி நபருக்கோ அல்லது கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கோ கடனுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் கடன் பெறும் பயனாளிகள் தொழிலில் அறிவும், ஆர்வமும், அனுபவமும் உள்ளவராக இருக்க வேண்டும்.

கூட்டுப் பொறுப்புக்குழு உறுப்பினர்களுக்கு மேலாண்மைப் பயிற்சி

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறு தொழில்கள் துவங்கிட தேர்ந்தெடுக்கப்பட்ட கூட்டுப் பொறுப்புக்குழு உறுப்பினர் களுக்கு 'ஒரு நாள் மேலாண்மைப் பயிற்சி' வழங்கப்பட்டது. இப்பயிற்சியானது ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கட்டிடங் களில் 03.12.2014 முதல் 06.12.2014 வரை நடத்தப்பட்டது. ஏற்கனவே கூட்டுப் பொறுப்புக் குழு குறித்த இரண்டு நாள் பயிற்சியில் கலந்து கொண்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள் திருமதி. ஜெஸிந்தா, திருமதி. வெல்லிபாய் ஆகியோர் கூட்டுவள மையப் பணியாளர்களுடன் இணைந்து, இப்பயிற்சியினை அளித்தனர்.

கூட்டுப் பொறுப்புக் குழுவின் நோக்கம், உறுப்பினர் தகுதிகள், குழுவின் அவசியம், குழு உருவாக்க விதிமுறைகள், குழுவின் நிலைத்த தன்மை, குழு மூலம் தொழில் துவங்க பெறப்படும் கடன் தொகை மற்றும் வட்டி விகிதம், தொழில் நடத்துதல் போன்ற தலைப்புகளில் விரிவான பயிற்சி வழங்கப்பட்டது.

கூட்டுப் பொறுப்புக் குழுவின் நோக்கம், உறுப்பினர் தகுதிகள், குழுவின் அவசியம், குழு உருவாக்க விதிமுறைகள், குழுவின் நிலைத்த தன்மை, குழு மூலம் தொழில் துவங்க பெறப்படும் கடன் தொகை மற்றும் வட்டி விகிதம், தொழில் நடத்துதல் போன்ற தலைப்புகளில் விரிவான பயிற்சி வழங்கப்பட்டது. குமரி மாவட்டத்தில் 2014-15ஆம் ஆண்டில் 36 கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் மூலம் பல்வேறு தொழில் முயற்சிகள் மேற் கொள்ளப்பட உள்ளன. இவற்றின் உறுப்பினர்கள் 152 பேருக்கும் இம்மேலாண்மை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ■

கவிதை – மகளிர் திட்டம்

சுய உதவிக் குழு...!

பெண்களின் சுமைதாங்கி...!
அல்லல்படுவோர் பசி தீர்க்கும்
அமுதசுரபி...!
கண்ணீர் துடைத்து கவலை தீர
தரப்பட்ட அருமருந்து...!
கைவிடப்பட்டோர் களிவாய் படர
போடப்பட்ட பந்தல்...!
மகளிர் மேம்பட தெளிவாய்
அமைத்திட்ட அஸ்திவாரம்...!
தமிழகம் சூடிப்பார்க்கும்
ஆண்டாள்களின் மாலை...!
துவண்ட அபலைகளை
தூக்கி நிறுத்தும் கொடி மரம்...!
கனவுகளை நனவாக்க வந்த
கற்பகத் தரு...!
பெண்ணால் எதுவும் முடியும்
என நிரூபித்த புதிய சூத்திரம்...!
நிலையான நீதிக்கு கருணை
போட்ட நங்கூரம்...!
அறியா பெண்கள் ஆற்றல் மேம்பட
அரசு தந்த அரியாசனம்...!
முயல்களை முந்த ஆமைகளுக்குக்
கிடைத்த அறிவோட்டம்...!
ஆண்மை தவறாமல் இருக்க
பெண்மைகள் தந்த குறள்...!

திருமதி. காளத்தி, கா.
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
TNVRC - சென்னை.

சென்னை

திறன் மற்றும் வேலை வாய்ப்புத் தேவை அறிதல் கருத்தரங்கம்

இளைஞர்களுக்கான திறன் மற்றும் வேலைவாய்ப்பு முகாமின் மூலமாக 2014 டிசம்பர் 29ஆம் தேதியிலிருந்து 2015 பிப்ரவரி 20ஆம் தேதிக்குள் எண்பதினாயிரம் இளைஞர்களை பணியில் அமர்த்துவதின் நோக்கமாக 'திறன் மற்றும் தொழிற்வாய்ப்புக்கான தேவை அறிதல் குறித்து ஒருநாள் கருத்தரங்கம்' சென்னை Benz Park ஹோட்டலில் 12.12.2014 அன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பல்வேறு நிறுவனங்களின் மனித வள மேம்பாட்டு பிரிவு அதிகாரிகள் கலந்து கொண்டு, தங்கள் நிறுவனத்திற்கு தேவைப்படும் மனித சக்தி குறித்து குழு கலந்துரையாடலில் பகிர்ந்து கொண்டனர்.

இப்பட்டறையில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர் திருமதி. எம். மாதவி, இணை இயக்குநர் திரு. மகேஷ்பாபு, புதுவாழ்வுத் திட்ட வாழ்வாதார வல்லுநர் திரு. எம். சக்கரபாணி மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

மின் ஆளுமை சேவை மையம் துவக்க விழா

துவாழ்வு திட்டத்தின் மாநில திட்ட இயக்குநர் அவர்களின் அறிவுரைப்படி அனைத்து கிராம வறுமை ஒழிப்பு சங்க அலுவலகத்திலும் கிராம கற்றல் மையம் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களின் சேவையை மேலும் மெருகூட்டும் வகையில் 'மாவட்ட மின் ஆளுமை' சங்கத்துடன் இணைந்து மின் ஆளுமை சேவை மையங்கள் துவங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் கிராம மக்கள் அந்தந்த ஊராட்சியிலேயே அரசின் நல திட்டங்கள், அரசு சான்றிதழ்கள் ஆகியவற்றை உரிய நேரத்தில் பெற்றுக் கொள்ள முடியும். இத்திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 100 கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தில் 'மின் ஆளுமை சேவை மையம்' அமைக்க திட்டமிடப்பட்டு, முதற்கட்டமாக 19.11.2014 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. டி. பி. ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 36 ஊராட்சிகளில் சேவை மையம் துவக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் ஒசூர் சார் ஆட்சியர் திரு. பிரவின் நாயர், மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன் மற்றும் வறுமை ஒழிப்பு சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

ஒத்தத் தொழில் குழுக்களின் (பூச்சரம்) காய்கறி சாகுபடி முறைகளையும், எம். பரூர் பால் உற்பத்தியாளர்கள் பால் பகுப்பாய்வு கருவி மூலம் பாலினை ஆய்வு செய்து பாலுக்கு உரிய விலை பெறுதல் போன்றவை ஆய்வு செய்யப்பட்டது.

கூடுதல் திட்ட இயக்குநரின் ஆய்வு

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டாரம், கச்சிராயநல்லூர், எம். பரூர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் காய்கறி, கறவை மாடுகள், ஒத்த தொழில் முனைவோர் குழுக்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளை 13.12.2014 அன்று, மாநில புதுவாழ்வு திட்ட கூடுதல் திட்ட இயக்குநர் திரு. எல். ராஜா அவர்கள் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாநில நுண்நிதி வல்லுநர் திருமதி. சரஸ்வதி கணேசன், மாவட்ட திட்ட மேலாளர் திரு. ப. கருப்பையா ஆகியோர் உடனிருந்தனர். கிராம வறுமை ஒழிப்புச் சங்க உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதியும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வழங்கும் அமுதசுரபி மற்றும் ஊக்க நிதிகள் சரியான முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்த கூடுதல் திட்ட இயக்குநர் அவர்கள், கடனாகப் பெறும் சுழல் நிதியை உரிய காலத்தில் திரும்ப செலுத்தி உறுப்பினர்கள் அனைவரும் பயனடைய வேண்டும் என்று அறிவுறுத்தியதுடன், இரண்டாம் தவணை நிதி பெறாத கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு நிதி கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆலோசனைகளை வழங்கினார். ■

நலத்திட்டப் பணிகள் ஆய்வு

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலை ஒன்றியம், ஜமுனா மரத்தூரில் புதுவாழ்வு திட்டத்தின் மூலம் பழங்குடியின மக்களுக்கு செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்ட பணிகளை ஆய்வு செய்வதற்கு இந்திய அரசின் பழங்குடியினருக்கான செயலாளர் டாக்டர். ரிஷிகேஷ் பாண்டே, இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான செயலாளர் திருமதி. கண்ணகி பாக்கியநாதன், இ.ஆ.ப., திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு. ஞானசேகரன், இ.ஆ.ப., மற்றும் பழங்குடியினருக்கான நல்வாழ்வு துறை இணை இயக்குநர் திருமதி. பேச்சியம்மாள் ஆகியோர் வருகை தந்தனர்.

இக்குழுவினர் பழங்குடியின சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடி அவர்களின் விவசாய உற்பத்திப் பொருட்களை பார்வையிட்டு, அவர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினர்.

இந்த ஆய்வின் போது திருவண்ணாமலை மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சி. செவத்தான், உதவித் திட்ட மேலாளர்கள் திரு. வரதராஜன், திரு. தணிகைவேல், திரு. பழனிசாமி, திரு. சுபாஷ் சந்திரன், கால்நடை ஆலோசகர் டாக்டர் சேகர், வேளாண்மை ஆலோசகர் திரு. சதீஷ்குமார், அணித்தலைவர் திரு. சுரேந்தர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், பிற துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
புது வாழ்வு திட்டம்

விருதுநகர்

தொழில் முனைவோராக்கிய திட்டம்!

விருதுநகர் மாவட்டம், சாத்தூர், இருக்கன்குடி கீழ்த் தெருவில் வசித்து வருபவர் ஆவடைத்தங்கம், கணவனை இழந்தவர். தினசரி 100 ரூபாய் கூலிக்கு வளையல் வியாபாரம் செய்து வந்த இவர், தனக்கு கிடைத்த சொற்ப வருமானத்தில் தனது தாய் மற்றும் தன்னுடைய மகளுடன் மிகவும் சிரமத்துடன் வாழ்ந்து வந்தார். இந்நிலையில் புதுவாழ்வு திட்டம் குறித்து கேள்விப்பட்டு, இருக்கன்குடி கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் அம்மன் 2 மகளிர் சுய உதவிக் குழுவில் சேர்ந்து, முதலில் ரூ. 3000/– உட்கடனாகப் பெற்று, இருக்கன்குடி மாரியம்மன் கோவில் வளாகத்தில் பேன்சி ஸ்டோர் ஒன்றினை துவக்கினார். பின்னர் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் தனிநபர் கடனாக ரூ. 10,000/– பெற்று தனது பேன்சி ஸ்டோரை விரிவுபடுத்தினார். ■

ஆவடைதங்கத்திற்கு நாளொன்றுக்கு ரூ. 500/– வரை வருவாய் கிடைக்கிறது. அனைத்து செலவுகளும் போக ஒரு மாதத்திற்கு ரூ. 8000/– வரை இலாபம் கிடைப்பதாக மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

மறுவாழ்வு தந்த புதுவாழ்வுத் திட்டம்!

சிகிச்சைக்கு முன்

சிகிச்சைக்குப் பின்

தீர்த்தம்மாள்

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், எல்லப் புடையாம்பட்டி கௌபாறை கிராமத்தைச் சேர்ந்தவர் தீர்த்தம்மாள் (வயது 40). இவருக்கு கடந்த 20 வருடங்களாக வலது மார்பில் கொழுப்பு கட்டி இருந்து வந்தது. சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு சென்ற போது ஒரு இலட்சம் ரூபாய் செலவு ஆகும் என்று சொன்னார்கள். இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த தீர்த்தம்மாள் மேற்கொண்டு செய்வது அறியாமல் திகைத்து நின்றார்.

தனது கிராமத்தில் புதுவாழ்வு திட்டத்தின் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் செயல்படுவதை அறிந்த தீர்த்தம்மாள், தனக்கு மருத்துவ சிகிச்சைக்கு உதவ வேண்டி கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தை நாடினார்.

மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. சீனு. நாராயணன் அவர்களின் ஆலோசனையின் பேரில், அரூர் களப்பகுதி அணித் தலைவர் திரு. சுதாகர், எல்லப்புடையாம்பட்டி கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் களப்பணியாளராகவும் காப்பீட்டு ஆலோசகராகவும் உள்ள திரு. இரவிச்சந்திரன் ஆகியோர் வழிகாட்டுதலுடன், தீர்த்தம்மாளுக்கு புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனை மேற் கொள்ளப்பட்டு, 03.11.2014 அன்று அறுவை சிகிச்சை செய்து தீர்த்தம்மாளின் வலது மார்பில் இருந்த கொழுப்புக் கட்டியை நீக்கியுள்ளனர்.

எவ்வித கட்டணமுமின்றி தனக்கு அறுவை சிகிச்சை செய்து தனது உயிரை காப்பாற்றிய புதுவாழ்வு திட்டம், கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் அகியவற்றின் அலுவலர்கள், நிர்வாகிகள், களப்பணியாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்கு தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறார் தீர்த்தம்மாள். ■

மதுரை

வாழ்க்கை வழிகாட்டி

மதுரை மாவட்டம் கே. வெள்ளகுளம் ஊராட்சியில் வசிக்கும் சிவராமன் மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர். 12ஆம் வகுப்பு வரை படித்துள்ள இவர் மேற்படிப்பு படிக்க வசதியில்லாததால் கூலி வேலைக்குச் சென்று வாழ்க்கையை நடத்தி வந்தார்.

நண்பரின் முயற்சியால் இலகுரக வாகனம் ஓட்டுனர் லைசென்ஸ் பெற்று லோடு ஆட்டே ஓட்டத் துவங்கினார். இந்நிலையில் இவருக்கு திருமணம் நடைபெற்று தற்போது இரண்டு குழந்தைகள் உள்ளன. மிகவும் குறைவான வருவாய் கிடைத்ததால் வறுமையில் வாழ்ந்து வந்த சிவராமன் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தில் இணைந்து புதுவாழ்வு திட்டத்தின் உதவியுடன் கனரக வாகனம் ஓட்டும் பயிற்சியும் லைசென்சும் பெற்றார். இவரின் பயிற்சிக்கான கட்டணத்தை புதுவாழ்வு திட்டம் செலுத்தியது.

தற்போது கனரக வாகனம் ஓட்டுவதன் மூலம் மாதம் ரூ. 10 ஆயிரம் வரை நிரந்தர வருவாய் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வரும் சிவராமன் , தனக்கு வளமான வாழ்வு கிடைக்க புதுவாழ்வு திட்டம் மற்றும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் ஆகியவைகள்தான் காரணம் என்று நன்றியுடன் கூறுகிறார். ■

வேலூர் அஜர்பெய்ஜான் நாட்டு குழுவினர் வருகை

புதுவாழ்வு வறுமை ஒழிப்புத் திட்டமான புதுவாழ்வு திட்டத்தினை செயல்படுத்தும் மாவட்டங்களில் ஒன்றான வேலூர் மாவட்டத்திற்கு அஜர்பெய்ஜான் நாட்டிலிருந்து 12 நபர்கள் கொண்ட குழு கடந்த 02.12.2014 மற்றும் 03.12.2014 ஆகிய நாட்களில் களப்பயணமாக வருகை புரிந்தனர். இக்குழுவினர் வேலூர் மாவட்டம் நெல்லூர்பேட்டை களப்பகுதியில் உள்ள மோடிக்குப்பம் கிராமத்தில் செயல்பட்டு வரும் கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, சமூக தணிக்கை குழு, சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஒத்த தொழில் குழுக்களை பார்வையிட்டு, மேற்கண்ட அமைப்புகளின் உறுப்பினர்களுடன் உரையாடியும், களப்பகுதியில் நேரடியாக பார்வையிட்டும் அறிந்து கொண்டனர்.

தாங்கள் அறிந்து கொண்டவைகளை தங்களது நாட்டில் செயல்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும் மாவட்ட மக்கள் கற்றல் மையத்தினை பார்வையிட்டு மாவட்ட மகமை ஒருங்கிணைந்த முறையில் புதுவாழ்வு திட்டம் மற்றும் பிற அரசுத் துறைகளுக்கும், பல்வேறு விதமான பயிற்சிகள் வழங்குவதை அறிந்து கொண்டனர். பின்னர் மாநில புதுவாழ்வு திட்ட இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோரை சந்தித்து, களப்பயணம் வாயிலாக தாங்கள் அறிந்து கொண்டதை பகிர்ந்து கொண்டனர். மேலும் தாங்கள் அறிந்து கொண்டவைகளை தங்களது நாட்டில் செயல்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மாநில வல்லுநர் திருமதி. கீதா, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திருமதி. பத்மா மணி, உதவித் திட்ட மேலாளர்கள், விவசாய ஆலோசகர் மற்றும் களப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். ■

நாமக்கல்

மனநோய் குறித்த விழிப்புணர்வு

நாமக்கல் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டம் சார்பில் 'புதுவாழ்வு மனநலத் திட்டம்' செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி எருமப்பட்டி வட்டாரத்தில் உள்ள பள்ளிகளில், ஆசிரியர் மற்றும் மாணவ மாணவிகளுக்கு மன நலத்தை நிலை நிறுத்தவும், மனநோய் தடுப்பு, மனநோயால் பாதிக்கப்பட்டவர்களை மனித நேயத்துடன் அணுகுவதற்கும் 'பூக்கள்' என்ற நாடகம் நடித்துக் காட்டப்படுகிறது. இந்த நாடகத்தை ஆசிரியர்களும், மாணவ மாணவியரும் ஆர்வத்துடன் கண்டு களிக்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாக முத்துகாபட்டி கிராமத்தில் 20.11.2014 அன்று மனநோய் தடுப்பு பற்றிய விழிப்புணர்வு பிரச்சார ஊர்வலம் நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் முத்துகாபட்டி அரசு மேல் நிலைப்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டு, மனநோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தினர். ■

மகளிரின் முகவரியாய் முற்றம்...!

முற்றம் இதழ் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	– ரூ. 100/–
இரண்டு ஆண்டு சந்தா	– ரூ. 150/–
மூன்று ஆண்டு சந்தா	– ரூ. 250/–
நான்கு ஆண்டு சந்தா	– ரூ. 300/–
ஆயுள் சந்தா	– ரூ. 600/–
புரவலர் கட்டணம்	– ரூ. 15,000/–

சந்தாத் தொகையை 'முற்றம்' என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தக்க முறையில் வங்கி வரைவோலையாக மட்டுமே அனுப்ப வேண்டும். வங்கி வரைவோலையுடன், சந்தாதாரரின் பெயர், க/பெ. (அ) த/பெ., குழுவின் பெயர், வீட்டு எண், தெரு எண், கிராமத்தின் பெயர், தாலுக்கா பெயர், மாவட்டத்தின் பெயர் ஆகியவற்றுடன் அஞ்சல் குறியீட்டு எண்ணையும் (பின்கோடு எண்) தவறாமல் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். முற்றம் சந்தாக்களுக்குரிய புத்தகம் அந்தந்த நபருக்கு அனுப்ப வேண்டுமா? அல்லது மொத்தமாக எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும் என்பதை தெளிவாகக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும்.

புதுவாழ்வு திட்டப் பணிகள் மாநில திட்ட இயக்குநர் ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை மாநில திட்ட இயக்குநர் திருமதி. வே. அமுதவல்லி, இ.ஆ.ப., அவர்கள் 06.12.2014 அன்று ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் மாற்றுத் திறனாளிகளுக்கான வீட்டு உபயோகப் பொருட்கள் பழுது பார்த்தல் பயிற்சியை பார்வையிட்டு பயிற்சி யாளர்களுடன் கலந்துரையாடினார். பின்னர் துர்க்கை அம்மன் பால் உற்பத்தியாளர் ஒத்த தொழில் குழுவின் உறுப்பினர்கள் பால்கோவா தயாரிப்பதையும், கோ 4 4, அசோலா போன்றவை வளர்ப்பதையும் பார்வையிட்டார். இந்த ஆய்வின் போது மாநில முதுநிலை வல்லுநர் திருமதி. சரஸ்வதி கணேசன், மாநில நுண்நிதி வல்லுநர் திரு. கே. கருப்பசாமி மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர் ஆகியோர் உடனிருந்தனர். ■

சிவகங்கை

மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள்

சிவகங்கை மாவட்டத்தில் 06.12.2014 அன்று மாற்றுத் திறனாளிகள் நலத்துறையும், புதுவாழ்வு திட்டமும் இணைந்து நடத்திய மாற்றுத் திறனாளிகள் தின விழாவில் சிவகங்கை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.ஆர். செந்தில்நாதன், சட்ட மன்ற உறுப்பினர் திரு. எஸ். குணசேகரன், காரைக்குடி சட்ட மன்ற உறுப்பினர் திரு. சோழன். சித. பழனிச்சாமி, மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திரு. குணசேகரன், திருப்பத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் திரு. கே.ஆர்.பெரிய கருப்பன், மாவட்ட ஆட்சியர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விழாவில் புதுவாழ்வு திட்ட கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் மூலம் 30 நபர்களுக்கு சிறு தொழில் மேற்கொள்ள 2,98,000/– ரூபாயும், 18 மாற்றுத் திறனாளிகள் சிறப்புக் குழுக்களுக்கு ஆதார நிதியும், தேசிய வங்கிகள் மூலம் நேரடிக் கடனாக 6,84,000/– ரூபாயும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்களின் சார்பில் 50 மாற்றுத் திறனாளிகளுக்கு வட்டியில்லா தொழில் கடனாக 5,13,000/– ரூபாயும் வழங்கப்பட்டது. மேலும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 190 பயனாளிகளுக்கு ரூபாய் 18,84890/– மதிப்பிலான மூன்று சக்கரம் பொருத்தப்பட்ட மோட்டார் வாகனங்கள், காது கேட்கும் கருவிகள் மற்றும் செயற்கைக் கால்கள் வழங்கப்பட்டன. ■

திருநெல்வேலி

புதுவாழ்வு மன நலத்திட்டம்

திருநெல்வேலி மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் சார்பில் ‘புதுவாழ்வு மனநலத் திட்டம்’ செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளிடையே கலைநிகழ்ச்சிகள் மற்றும் ரத ஊர்வலம் மூலம் மனநல பாதிப்பு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி புதுவாழ்வு மனநலத் திட்ட விழிப்புணர்வு கலை நிகழ்ச்சியை திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் முனைவர் மு.கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாநில புதுவாழ்வு திட்ட வல்லுநர் திரு. பழனிவேலு, மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பாஸ்கரன், உதவித் திட்ட மேலாளர் திருமதி. சதியம்மாள் மற்றும் கலைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மானூர் ஒன்றியத்தி லுள்ள கிராமங்கள் மற்றும் அனைத்து பள்ளிகளிலும் மனநலத் திட்ட விழிப்புணர்வு குறித்த கலைநிகழ்ச்சிகளை நடத்தப்பட்டு, கிராம மக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகளிடையே, மனநோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ■

நலத் திட்ட உதவிகள்

திருப்பூர், பெத்தப்பம்பட்டி வெங்கடசுப்பா நாயுடு திருமண மண்டபத்தில், 06.12.2014 அன்று புதுவாழ்வு திட்டமும் மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நலத்துறையும் இணைந்து நடத்திய மாற்றுத் திறனாளிகள் தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்ற துணை சபாநாயகர் திரு. பொள்ளாச்சி ஜெயராமன், பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. மகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு, 90 மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர சைக்கிள், சக்கர நாற்காலி, காதுகேட்கும் கருவி, கற்பித்தல் கருவிகள், ஊன்றுகோல்கள் மற்றும் 28 சுய உதவிக் குழுவினருக்கு நேரடிக் கடனுக்கான காசோலைகளையும், திறன் பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கினர். இவ்விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், பேரூராட்சித் தலைவர் மற்றும் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

விழிப்புணர்வு நிகழ்ச்சி

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டணம் ஒன்றியத்திற்குட்பட்ட 32 ஊராட்சிகளில் 'புதுவாழ்வு மனநலத் திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி' தொடங்கப்பட்டது. அயோத்தியாப்பட்டணம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் விழிப்புணர்வு பிரச்சார வாகனம் மற்றும் கலை நிகழ்ச்சியை 19.11.2014 அன்று மாவட்ட ஆட்சியர் திரு. க. மகரபூஷணம், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் புதுவாழ்வு திட்ட மாவட்ட மேலாளர் திரு. க. மூர்த்தி, ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திரு. ஏ.பி. மணி, வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. மணிவண்ணன் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர். 19.11.2014 முதல் 10.12.2014 வரை நடைபெற்ற புதுவாழ்வு மன நலத்திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலைக் குழுக்கள் மூலமாக சிறு நாடகங்கள், விழிப்புணர்வு பாடல்கள் மற்றும் துண்டு பிரசுரங்கள் போன்றவற்றின் வாயிலாக மனநலத்தின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு அனைவருக்கும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. ■

உலக வங்கிக் குழுவினர் ஆய்வு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் புதுவாழ்வு திட்டத்தின் செயல்பாடுகளை பார்வையிடுவதற்காக 15.11.2014 அன்று உலக வங்கியின் பிரதி நிதிகளான திருமதி. லாரன்ஹெல்லி, திருமதி. நேத்ரா மற்றும் புதுவாழ்வு திட்டத்தின் கூடுதல் திட்ட இயக்குநர்கள் திருமதி. ஆர். வி. ஷஜீவனா மற்றும் திருமதி. சுஜாதா ஜேக்கப் ஆகியோர் காஞ்சிபுரம் உத்திரமேரூர் கிளாக்காடி ஊராட்சியில் ஆய்வு செய்தனர்.

கிராமப் பகுதிகளில் வாழும் மிகவும் ஏழை, ஏழை, நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியினர் ஆகியோர்களின் சமூக பொருளாதார மற்றும் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக புதுவாழ்வு திட்டத்தின் மூலம் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளையும், மக்கள் பங்கேற்புடன் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் பயனாளிகளை தேர்வு செய்வதையும் மக்களிடம் கேட்டறிந்தனர்.

புதுவாழ்வு திட்டத்தின் மூலம் மங்கலம் ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள பால் உற்பத்தியாளர் ஒத்த தொழில் குழுவின் செயல்பாடுகளையும், அவர்களின் கால்நடைகளுக்கு

வழங்கப்படும் தீவன முறை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட புதுவாழ்வு திட்ட மேலாளர் திரு. பி. தனசேகர் மற்றும் உதவித் திட்ட மேலாளர்கள் கலந்து கொண்டனர். ■

கிராமப் பகுதிகளில் வாழும் மிகவும் ஏழை, ஏழை, நலிவுற்றோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பழங்குடியினர் ஆகியோர்களின் சமூக பொருளாதார மற்றும் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு புதுவாழ்வு திட்டத்தின் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மக்கள் பங்கேற்புடன் மேற்கொள்ளப்படுகிறது.

முனைவர் வெ. புருஷோத்தமன்
வணிக மேம்பாடு மற்றும் கூட்டாண்மை
வல்லுநர்-II
புதுவாழ்வு திட்டம்

ஊறுகாய் புல் தயாரித்தல்

II

சுந்தீவனம் அதிகம் உற்பத்தி செய்யப்படும் காலத்தில், அதிகம் உள்ள புற்களை சேமித்தால், அவற்றை வறட்சி காலங்களில் பயன்படுத்த ஊறுகாய்ப்புல் உதவுகிறது.

தக்க பருவத்தில் அதாவது ஈரப்பதம் 70–75 சதவீதம் இருக்கும் போது அறுவடை செய்த பின்பு அதை 3–4 மணி நேரம் உலரவிட வேண்டும். பின்னர் அதை அரை அடி அளவிற்கு வெட்ட வேண்டும். இதற்கென்று தனியாக தயாரிக்கப்பட்ட சிமெண்ட் தொட்டியில் அல்லது மரத்தினால் ஆன தொட்டியில் தீவனத்தை அடுக்கடுக்காக நிரப்ப வேண்டும். 1 1/2 அடி நிரப்பிய பிறகு, 100 கிலோ புல்லிற்கு, யூரியா 1/2 கிலோ, உப்பு 1/2 கிலோ ஆகியவற்றை போட வேண்டும். பின்பு அவற்றை அமிழ்த்தி, காற்றினை வெளியேற்ற வேண்டும். தொட்டி நிரம்பிய பின்பு, பாலிதீன் பேப்பரை விரித்து, அதன் மேல் மண்ணைக் கொட்டி காற்று புகாமல் பூச வேண்டும்.

மழை நீர் தொட்டியில் புகாமல் தொட்டியினை அமைக்க வேண்டும். மூடிய 3 மாதங்களுக்குப் பிறகு தொட்டியை திறந்து ஊறுகாய்ப் புல்லினை பயன்படுத்தலாம். காற்றுப்புகாமல் இருக்கும் போது, பல மாதங்கள் வரையும் சேமித்து வைக்கலாம்.

ஊறுகாய்ப் புல் குறித்து மேலும் விபரங்களை அறிய
கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி மையம்,
காட்டாங்குளத்தூர்,
காஞ்சிபுரம் – 603 203.
இந்த முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

கவிதை – புதுவாழ்வு திட்டம்

சுயமான வாழ்வுக்கு சுய உதவிக் குழு...!

சுய உதவிக் குழுவால் சுயமான
சிந்தனைகள் பல உண்டு!
சுகமான வாழ்வுக்கான முயற்சிகள்
பல எடுக்க வழி உண்டு!!
கண்களின் இமைகள் போல
பெண்களை காக்கும் முகம் உண்டு!
கூட்டு முயற்சிகள் கூட்டாண்மை
வழிமுறைகள் என உண்டு!!

சேமிப்பு செய்வதிலும் உள்கடன் பெறுவதிலும்
ஒற்றுமை உண்டு!
சேர்ந்து வெளிகடன் பெறுவதும் சிறப்பாய்
திருப்புதலிலும் தன்மானம் உண்டு!!
சொத்துக்கள் உருவாக்குவதற்கும் வருமானம்
பெருக்குவதற்கும் வலிமைகள் உண்டு!
சொந்தமான முடிவும் குழுவின் வழியும்
துணைகள் உண்டு!!

எழுத்தறிவு கற்பதிலும் எண்ணறிவு எட்டிடவும்
பயிற்சிகள் பல உண்டு!
எண்ணற்ற திட்டத்தாலும் ஏற்றமான எழுச்சியாலும்
மகளிரின் சக்தி உயர்வதுண்டு!!
பெண்ணுரிமை காத்திடவும் பேதமையை
ஒழித்திடவும் ஒற்றுமை உண்டு!
பெண்ணடிமை ஒழித்திடவும் பாலின பாகுபாடு
தகர்த்திடவும் வழிகள் பிறப்பதுண்டு!!

சமூக நலத்திட்டங்களில் பங்கேற்க
ஆர்வங்கள் வருவதுண்டு!
சமூகத்தில் புரட்சிக்கான புதுமைகள் படைப்பதுண்டு!!
தன்மானம் காத்திட தன்னம்பிக்கை பல உண்டு!
தன்னிகரில்லா வளர்ச்சிக்கான தொடர்ச்சியான
பயணம் உண்டு!!

வாருங்கள் சுய உதவிக் குழு எனும் சமுத்திரத்தில்
இணைந்தோம்! (இணைவோம்)
வளமான எதிர்காலத்தை பலமாக அமைத்திடுவோம்
வாழ்வோம்! வளர்வோம்! வளமான வாழ்வு காண
வாழ்வாதாரத்தைப் பெருக்கி புதுவாழ்வு
பெற்றிடுவோம்!

ப. முத்துவேல்
உதவித் திட்ட மேலாளர் (வணிகநிதி)
கடலூர் மாவட்டம்

Published by S.CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From TNCDW, Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai – 600 034 (60,900 Copies circulated) an Printed by C. JEBAMANI, CANAAN PRESS PRIVATE LTD., No. 62/1, Peter's Road, Royapettah, Chennai - 600 014. Editor: S.CHINNAPPAN.

கழிப்பறை உபயோகமே, வாழ்க்கைக்கு ஆரோக்கியமே

மனித மலம் ஆபத்தானது

1 கிராம் மனித மலத்தில்

10,000,000 வைரஸ்கள்

1000,000 பாக்டீரியா

1,000 பாராசைட்சிஸ்ட்கள்

100 பாராசைட் முட்டைகள் உள்ளன.

வெளியே மலம் கழிக்கும் பொருட்டு, ஏரி அல்லது குளக்கரைக்கு செல்பவர்களுக்கு தங்கள் அடிப்பாதங்கள் வழியாக கொக்கிப் புழுக்கள் மற்றும் உருண்டைப் புழுக்கள் உடலினுள் புகுந்து பல்வேறு வயிற்றுப்பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர்.

வெளியே மலம் கழித்த பின், சுத்தம் செய்து கொள்ள, நீர் ஓட்டமில்லாத ஓடையையோ, குளத்தையோ பயன்படுத்துவதால் பல்வேறு தொற்றுகள் உண்டாகி அதனால் வயிற்றுப்போக்கு, வாந்தி ஆகியவை அடிக்கடி ஏற்படுகின்றன, தேவையான சிகிச்சைகள் அளிக்கப்படாமல் போகும்பட்சத்தில் உயிர் இழக்கும் அபாயம் உள்ளது. மலம் கழிக்கும் மைதானம், வயல் அல்லது குளக்கரையிலிருந்து உண்டாகும் கொசுக்கள் மூலமாக அருகிலிருக்கும் குடும்பங்கள் மிகவும் பாதிப்படைகின்றன, மலேரியா, டெங்கு, சிக்கன்குனியா போன்ற நோய்களும் உண்டாகின்றன.

குழந்தைகள் வீட்டிலும், பள்ளியிலும் கழிவறையை மட்டுமே பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும். தங்கள் வீட்டுக்கென எளிமையான சுத்தமான சுகாதாரமான கழிவறைகளை உருவாக்கி பயன்படுத்துவதன் மூலம் நோயற்ற, ஆரோக்கியமான வாழ்வினை பெற வேண்டும் அனைவரும்.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 498 / 2012
Reg. No. TN/CH(C)/455/12-14 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP - 564 / 2012 - 14
Date of Publication 21.12.2014

You keep the wheels turning
and
we keep your dreams alive

Indian Bank's
MSME
FINANCE
An exclusive opportunity for
Traders, Micro and Small Entrepreneurs

● Attractive Interest rates ● Customer friendly loans
● Personalised customer service ● Quick Processing

For more details visit your nearest Branch

Corporate Office:
254-260, Avvai Shanmugam Salai,
Royapettah, Chennai - 600 014.
Email: indmail@indianbank.co.in
Toll Free No: 1800 425 00 000
Visit us at: www.indianbank.in

इंडियन बैंक
Indian Bank
आपका प्रौद्योगिकी हितैषी बैंक
Your Tech-Friendly Bank